பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 112 புதன்கிழமை 29.03.2023 கதிர் 140

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: தமிழ் அரசுக் கட்சி நிராகரிப்பு

## அதற்கு முழு எதிர்ப்பு, சட்ட நடவடிக்கையும் எடுப்போம் என்று கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் யாழ். நகரில் தெரிவிப்பு

இந்த ஆட்சியால் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபை முற்றாக நிராகரிக்கிறோம் எனத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

''பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம். அதனை நிராகரிக்கின்றோம். அதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்போம். பயங்கரவாதத்திற்கென தனியான சட்டம் தேவையில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்திருக்கிறது. எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முழுமையாக எதிர்ப்போம்'' என்றார் அவர்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடை சட்டம் நீக்கப்பட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கிற புதிய சட்டத்துக்கான வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 40 வருடங்களுக்குமேலாக நாட்டில் இருக்கின்றது. ஆறு மாத காலத்திற்காக ஒரு தற்காலிகச் சட்டமாக கொண்டுவரப்பட்ட அச்சட்டம், சில வருடங்களுக்குப் பிறகு 1981ஆம் ஆண்டு நிரந்தரமான சட்டமாக மாற்றப்பட்டது

இது மிகவும் மோசமான ஒரு ☞2

## ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

### தமிழகம் சென்ற அகதி பேட்டி:

ந.லோகதயாளன்.

இலங்கையில் ஆட்சி மாறியுள்ளதே அன்றி காட்சி மாறவில்லையென செவ்வாய்க்கிழமை தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்றவர்கள் தெரிவித் துள்ளனர்.

இலங்கையில்தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 8 தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் சென்றனர். ☞2

## ஸ்ரீ ரங்காவுக்கு மறியல் நீடிப்பு



முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்கா வுக்குவிளக்கமறியல்மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அவரை ஏப்ரல் 12ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதிஎம்.மொஹமட்நிஹால் செவ்வாய்க்கிழமை உத்தர விட்டார்.

வவுனியாவில் இடம் பெற்றகார்விபத்தில்பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந் தமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு நீதிமன் றத்திற்கு வரவில்லை என்ப தோடு, சாட்சியாளர்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச் சாட்டின் கீழும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இது ரகசியம் அல்ல!

'சபாஷ்! சரியான போட்டி' - என்று சொல்லும் அளவுக்கு இலங்கைத் தமிழரசுக் குள் உட்கட்சி அக்கப்போர் வலு கனதியாகச் சூடு பிடித்திருக்கின்றது.

கடந்த ஒன்பது வருடங்களாகக் கட்சித் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா, இவ்வளவு காலத்துக்கும் கட்சியின் ஒரே ஒரு தேசிய மாநாட்டை மாத்திரமே கூட்டியிருக்கின்றார். பிள்ளையார் கல்யாணம் போல நாளை, நாளை என்று இனிமேலும் மாநாட்டை நடத்தாமல் அவர் இழுத்தடிக்க முடியாது என்பதுதான் களநிலைவரம்.

மாநாட்டை நடத்தாமல் சாக்குப்போக்குச் சொல்லி இழுத்தடித்து, கட்சித் தலைவராகத் தாமே தொடரும் மாவையரின் தந்திரம் இனி மேலும் பலிக்காது என்றுதான் தோன்றுகின்றது. அவ்வளவு தூரம் கட்சிக்குள் எதிர்ப்பைச் சம்பாதித்து விட்டார் அவர்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற கட்சியின் யாழ் மாவட்ட குழுவின் கூட்டத்திலும் ☞2

## அமைச்சுப் பதவி தராவிடின் எதிர்க்கட்சியில் அமர்வோம்

### ரணிலை மிரட்டும் 'மொட்டு'வின் சிரேஷ்ட எம்.பிக்கள்

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமக்கு அமைச்சுப் பதவி தரவில்லையென்றால் நாம் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுவோம் அல்லது எதிர்க்கட்சியில் அமர்வோம்.'

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சுப்பதவிகள் என்பது தொடர்ந்தும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. இதோ தருகின்றேன், அதோ தருகின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடித்துக்கொண்டே இருக்கின்றார். இதனால் அவர்கள் ஜனாதிபதி மீது கடும் கடுப்பில் உள்ளார்கள். ☞2

## வெடுக்குநாறி ஆதி லிங்கம் மீண்டும் அமைக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலயம் அதேயிடத்தில் மீள அமைக் கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார். ''ஆதி சிவன் ஆலயத்தை விரைவில் மீண்டும் அமைப்பது தொடர்பாக நேற்று இடம்பெற்ற அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது. அதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவாக இருக்கின்றனர்'' இவ்வாறு அவர் தெரிவித்தார் என்று அவரது அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகர பேரூந்து நிலையத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயத்தைத் தெரிவித்தார் ☞2

## சைவர்களின் அடையாளத்தை அழிக்கும் நிகழ்ச்சி நிரல் துரிதமாக முன்னெடுப்பு

### தொல்லியல் திணைக்களத்திற்கு எதிராக விரைவில் நடவடிக்கை என்கிறார் சுமந்திரன்

இலங்கையில் சைவர்களின் அடையாளங்களை அழிக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சைவர்களின் அடையாளங்களை அழிக்கும் துரிதமான நிகழ்ச்சி நிரலொன்று முன்னெடுக்கப்படுகின்றது. அந்த நிகழ்ச்சி நிரலில் இறுதியாக நடைபெற்றிருப்பது, வவுனியா, நெடுங்கேணியில் உள்ள ☞2

## "நீக்கும்வரை பதவியில் தொடர்வேன்"

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தி என்னைப் பதவியிலிருந்து அகற்றும் வரையில் எனது வழமையான பணிகளை தங்குதடையின்றி முன்னெடுப்பேன் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் மிகவும் வேடிக்கையானவை. எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் என்னை பதவி நீக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். ☞2

## ரணிலுடன் மைத்திரி விரைவில் சங்கமம்

### இரகசியப் பேச்சுக்கள் மும்முரம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் மனக்கசப்பு இருந்தாலும்கூட அதையெல்லாம் மறந்து மைத்திரிபால சிறிசேனவை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைப்பதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருவதை அறியமுடிகின்றது.

அரசுடன் இணைந்திருக்கும் ஸ்ரீலங்கா ☞2



# பெற்றோல் விநியோகம் நேற்று முதல் நிறுத்தம்

பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கொலன்னாவை முனையத்திலிருந்து நாடுமுழுவதுற்குமான எரிபொருள் விநியோகம் நேற்று நண்பகல் முதல் இடைநிறுத்தப்பட்டது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் பயனில்லை என்ற தீர்மானத்திற்கு வந்த நிலையில் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

இதனால், எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளும் நேற்று நண்பகல் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத்தினர் அறிவித்தனர்.

அத்துடன் கொலன்னாவையில் எரிபொருள் நிரப்புவதற்காகச் சென்ற பவுசர்கள் அனைத்தும் நீண்ட வரிசையில் காத்திருந்ததோடு, மாலையளவில் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டு அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொதுச்சேவைகள் சங்கத்தின் தலைவர் கலாநிதி அசோக ரங்வெல தெரிவித்ததாவது:

பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து நாம் திங்கட்கிழமை காலை முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்தோம். ஆனால் செவ்வாய்க்கிழமை நண்பகலாகின்றபோதும் அதனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை என்பதை உணர்ந்தோம்.

எமது கோரிக்கைகள் தொடர்பில் யாரும் கருத்திலெடுத்துப் பதிலளிக்கவில்லை. இதனால் நாம் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்தோம். அதற்கு ☞2

## நடவடிக்கைக்கு காஞ்சன பணிப்பு

அத்தியவசிய சேவையான எரிபொருள் விநியோகத்தினை தடையின்றி முன்னெடுக்குமாறு அமைச்சர் காஞ்சன விஜயசேகர அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் பெற்றொலிய கூட்டுத்தாபனத் தலைவருக்கு அவர் விடுத்துள்ள அறிவிப்பில், 'அத்தியாவசிய சேவைகள் கட்டளையின் பிரகாரம் எரிபொருள் விநியோகம், அல்லது அத்தியாவசிய சேவை நடவடிகைகளுக்கு இடையூறு விளைவிப்பது, தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலை ஆகியவற்றின் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றது. என்று தெரிவித்திருக்கிறார்.

## எரிபொருள் விநியோகம் தொடர்கிறதாம்

இடையூறு இன்றி எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள விசேட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்புக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எரிபொருளை நிரப்புவதற்கு வருகை தந்த பௌசர்கள் செவ்வாய்க்கிழமை நீண்ட வரிசையில் கொலன்னாவை முனையத்தில் காத்திருந்தன.

இதனையடுத்து நாடளாவியரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் பொதுமக்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கின்றனர். ☞2

### முன்னைய குழு அறிக்கைகள் கிடப்பிலுள்ளபோது

## உண்மை அறியும் ஆணைக்குழு இலங்கையில் இப்போது எதற்கு?

### அம்பிகா சற்குணநாதன் கேள்வி

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டுள்ள நிலையில் உண்மை அறியும் ஆணைக்குழு எதற்காக அமைக்கப்படுகின்றது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய அறிக்கையை செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியிட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலின்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் தொடர்பில் ஆட்சியாளர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் வினவப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஏற்கனவே பல்வேறு ☞2

## நிலைமாறுகால அமைப்புக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டன

### சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

இலங்கையில் நிறைமாறுகால நீதிப் பொறிமுறையை அடியொற்றி உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் பாதிக்கப்பட்டவர்களினதும் அவர்களின் உறவுகளினதும் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளன. இலங்கையின் உள்நாட்டுப்போரின்போது இழைக்கப்பட்ட மிகப் பாரதூரமான மனித உரிமைமீறல்களுக்குத் தீர்வு காணப்படாத நிலைமை இன்னும் நீடிக்கிறது.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள தனியார் விடுதியில் வெளியிடப்பட்டது. குறித்த அறிக்கையின் இலங்கை நிலவரம் குறித்து பகுதியிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையில் மிகமோசமான பொருளாதார நிலைமைக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் ஆட்சிக்கு உடன்பட மறுப்பவர்களிற்கு எதிரான தனது நடவடிக்கையை இந்த ஆட்சி தீவிரப்படுத்தியது.

கருத்துச் சுதந்திரத்திற்கான ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுஎதிரொலித்தது. மாநாட்டை நடத்தாமைக்காகக் கீழ்ப்பட்ட உறுப்பினர்கள் பலரிடமும் இருந்தும்கூட தலைவர் வாங்கிக் கட்டியமையைப் பார்க்கப்பரிதாபமாக இருந்தது என ஆதங்கப்பட்டார் கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர் ஒருவர்.

ஞாயிறுகூட்டம்முழுவதும் 'அமானுஷ்ய' அமைதி காத்தார் தமிழரசுப் பிரமுகர் சுமந்திரன். ஆனால் கூட்டம் முடிந்ததோ, இல்லையோ அவரும்தலைவர் மாவையர் மீது சீறி விழுந்தார். கூட்டம் முடிந்து புறப்படவிருந்த கூட்ட அங்கத்தவர்கள் எல்லோரும் விக்கித்துப் போய் நின்றனர். குரலை எழுப்பி, தமக்கு எதிராகக் கட்சிக்குள்ளும் வெளியிலும் உறுப்பினர்கள் சிலர் முன்னெடுக்கும் கபடத் திட்டங்களையும், அவற்றுக்கு ஆதரவு தருவது போல செயல்படும் கட்சித் தலைமையின் போக்கையும் கடுமையாக விவரித்து சாடினார் சுமந்திரன்.

சுமந்திரனின் சீற்றத்துக்கானபின்புலத்தைஅறிவதற்கு ஒரு 'பிளாஷ்- பாக்' அவசியம்.

இது நடந்தது 2020 பெப்ரவரி 25 அல்லது 26 ஆம் திகதியாக இருக்கலாம். அதன் பின்னர் ஒரு வாரத்தில் கடந்தநாடாளுமன்றம்கலைக்கப்பட்டு விட்டது. அதற்குச் சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனின் பிறந்தநாள் நிகழ்வின் பங்கு கொண்டார் சுமந்திரன்.

2010 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக சுமந்திரனை நியமிக்கச் செய்த பின்புலத்தில் கனக ஈஸ்வரனுக்கு முக்கிய பங்கு உண்டு. சம்பந்தனின் நேரடி வற்புறுத்தல், தமது சீனியர் சட்டத்தரணியான கனகஈஸ்வரனின் அழுத்தம் ஆகியவையே சுமந்திரனை அரசியலுக்கு இழுத்து வர பிரதான காரணிகளாக இருந்தன.

அதன் பின் சரியாகப் பத்து ஆண்டுகள் கழித்து, 2020 பெப்ரவரி இறுதியில் கனகேஸ்வரனின் பிறந்த நாளன்று அவருடன் மனம் விட்டு பேசினார் சுமந்திரன்.

கூட்டமைப்பின் போக்கில் தான் சலிப்புற்று விரக்தி அடைந்திருக்கின்றார் என்றார் சுமந்திரன். தமிழரசின் அப்போதைய இரண்டு எம்.பிக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு (ஒருவர் கூட்டமைப்பின் இன்னொரு பங்காளிக் கட்சியில் இருந்து எம்.பியாகி தமிழரசுப் பக்கம் தாவியவர்) அவர்களின் திருகுதாளங்கள் குறித்துபுலம்பினார்சுமந்திரன்.

''இத்தகைய பிரகிருதிகளோடு இனியும் மாரடிக்க முடியாது. அது அர்த்தமற்றது. மீண்டும்அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட இடம் கொடுக்கப் போகின்றார்கள். கட்சியும்கூட்டமைப்பும் உருப்படப்போவதில்லை. இத்தோடு நானாகவே ஒதுங்கிக் கொள்கிறேன்."- என்றார் சுமந்திரன்.

"உங்கள் முடிவு சரியே. சம்பந்தனிடமும் மாவையிடமும் கூறிவிட்டு ஒதுங்குங்கள்"- என்றுவழிப்படுத்தினார் கனகஈஸ்வரன்.

அடுத்த ஓரிரு நாள்களில் மாவையையும் சம்பந்தனையும் கொழும்பில் ஒன்றாகச் சந்தித்தார் சுமந்திரன். தமது முடிவைத் தெளிவாக இருவருக்கும் எடுத்துரைத்தார். எந்த முரண்பாடும் இல்லாமல், தானாக, அமைதியாக, ஒதுங்கி கொள்கிறார் என்றார் சுமந்திரன்.

ஆனால் சம்பந்தனும் மாவையரும் விடவில்லை.

''உங்களை அடுத்த தலைவராக நாம் வளர்த்து வருகின்றோம். இப்போது நீங்கள் போனால் கட்சி என்னாவது...?"என்றுவழமை போல நடிப்பு - பசப்பு - வார்த்தைகளைப் பேசினார் மாவையர்.

"சுமந்திரன் விலகிப்போக அனுமதிக்கப்படமாட்டாது!'' - என்று உரத்த குரலில் அறுத்துறுத்து கட்டளைபோல பேசிவிட்டு எழுந்து சென்றார் சம்பந்தன்.

அந்தச் சம்பவத்தைத் தான் ஞாயிறு மாவட்ட குழு கூட்டம் முடிந்த பின்னர், தாம் குரல் எழுப்பி, தலைவர் மாவை மீது சீறி பாய்ந்த போது நினைவுபடுத்தினார் சுமந்திரன்.

"அன்றுநானாகஒதுங்கிப் போக விரும்பினேன். நீங்கள் விடவில்லை. மறித்தீர்கள். இன்று - இனி - நீங்கள் விலகச் சொன்னாலும் நான் விலக மாட்டேன். சரியானவற்றை நிலைநாட்டியே தீருவேன். கட்சியின் நடவடிக்கைகளை - செயற்பாடுகளை - தவறாக முன்னெடுத்தீர்களாயின் எல்லோரையும் நீதிமன்றத்தின் முன் - சட்டத்தின் முன் நிறுத்துவேன். நேற்று இரவு (சனி இரவு) சம்பந்தன் ஐயாவை கொழும்பில் சந்தித்து, இந்த நிலைமைகள் எல்லாவற்றையும்அவரிடமும் வெளிப்படையாகக் கூறி விட்டுத்தான் வந்திருக்கிறேன். குறுக்கு வழிகளை நாடினால் - தவறாகச் செயற்பட்டால் - நீதிமன்றங்களுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கும். என் வேலை நீதிமன்றத்தில் தான். ஆனால் கட்சியில் தவறிழைப்போர் - குறுக்கு வழியில்விடயங்களைசாதிக்க முயல்வோர் - நீதிமன்றத்தில் தவம்கிடக்கவழிசெய்வேன்!" - என்று சுமந்திரன் போட்ட போடில் மாவையர் நிலை குலைந்துதான் போனார் என்கின்றன நேரில் விடயங்களைப் பார்த்த கட்சி வட்டாரங்கள்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனு தயாரித்த முறைமைகுறித்துஒழுகாற்று விசாரணை என்று மன்னார் மத்திய குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக வெளியான அறிவிப்பில் தொடங்கி, பல விடயங்களை வரிசையாக அடுக்கினார் சுமந்திரன். அவற்றுக்குச் சரியான பதில் தந்து சமாளிக்க முடியாமல் திணறிய மாவையரின் நிலைமை பெரும் பரிதாபம்தான்.

''மன்னாரில் நடந்த மத்திய குழுக் கூட்டத்தில் ஒரு விடயத்தை ஒட்டி நான் விளக்கம் அளித்து அமர்ந்ததும், நீங்கள் (மாவை) எழுந்து 'சட்டத்தரணிகள் அப்படித்தான் பேசுவார்கள். சமாளித்து விளக்கங்கள் தருவார்கள். அவர்கள் கொலைகாரர்களுக்காகவும் வாதிடுபவர்கள்தானே!' என்று என்னை சுட்டினீர்கள். நான் எந்த கொலைகாரருக்கும் முன்னிலையாவதில்லை. ஆக, உங்களுக்காகத்தான் இருபது வருடங்கள் நீதிமன்றத்தில்பல்வேறுவழக்குகளில் ஆஜராகிவருகிறேன்" என்றும் சுமந்திரன் செமத்தையாகக் கொடுத்தார்.

நடந்த விவகாரங்களை நான் இன்னும் நுணுக்கமாக விவரிக்கப் போனால் நானும் 'சுமந்திரபுராணம்' பாடுகிறேன் என்றுநீங்கள்முணுமுணுக்கத் தொடங்கி விடுவீர்கள்.

அதனால் இந்த மட்டில் இவ்விடயத்தை முடித்துக் கொள்வோம். மேல் விவரங்களை பிறிதொரு நாள் பார்க்கலாம்.

- இடி மின்னல்

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம். பலராலே அப்படிவிமர்சிக்கப்படுகின்ற இந்தச் சட்டத்தை நீக்குவதாக தற்போதைய ஜனாதிபதியே பிரதமராக இருந்தபோது 2017ஆம் ஆண்டு அறிவித்திருந்தார். ஐரோப்பியஒன்றியத்திற்கு வாக்குறுதியும் அளித்திருந்தார்

அதற்கு பிறகுதான் பயங்கரவாத தடை சட்டத்தை மாற்றி பயங்கரவாத தடுப்புச் சட்ட வரைவு அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதிலிருந்த பல தவறுகள் மக்கள் பிரதிநிதிகளோடும் பொது அமைப்புகளோடும் கலந்துரையாடப்பட்டுதிருத்தப்பட்டிருக்கின்றன

2018ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பைச் சாட்டாகக் காட்டி அந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் கைவிட்டார்கள்.

இந்த நிலையில் இப்பொழுது கொண்டு வந்திருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு ஒப்பானது அல்ல அதைவிட மோசமானது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே நடந்த அத்துமீறல்கள் தொடர்பில் பொறுப்புகூறாத கொழும்பின் ஆட்சிகள் இப்போது இருப்பதைவிட மோசமான ஒரு சட்டத்தைக் கொண்டுவரப் பார்க்கின்றன.

எனவே அந்தப் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம். அதனை நிராகரிக்கின்றோம். அதற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்போம்.

புதிய சட்டம் கொண்டு வரப்படுவதாக இருந்தால் அது முதலிலே பொது அமைப்புகளோடு பேசி இணக்கம் காணப்படவேண்டும்

இதில் இன்னொரு விடயத்தை குறிப்பிட வேண்டும்பயங்கரவாததடுப்புசட்டம் நீக்கப்படல்சம்பந்தமாகமனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்கனவே சென்ற வருடம் ஒரு பரிந்துரையை முன் வைத்திருக்கின்றது

"பயங்கரவாதத்திற்கான ஒரு விசேட சட்டம் தேவையில்லை'' என்று அந்தப் பரிந்துரை கூறுகின்றது. எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற புதிய சட்டத்தை ஆட்சியாளர்கள் கொண்டுவருவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

இந்த ஆட்சி செல்லும் பாதை ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என்பதை ஆட்சியாளர்கள் அறிவார்கள். தேர்தல்கள் நடத்தப்படாமல் ஜனநாயக பாதையில் இருந்து இந்த ஆட்சிவிலகிச்சென்றிருக்கிறது. மாகாண சபை தேர்தலை பலகாலம் முடக்கி வைத்து தற்பொழுதுஉள்ளூராட்சிசபை தேர்தலையும், அறிவிக்கப்பட்ட பிறகுகூட நடத்தாது நிதி நிலைமைக் காரணம் காட்டி நாட்டில் ஒரே ஒருநபர் தடுத்து வைத்திருக்கின்றார்

இது ஒரு ஜனநாயக ஆட்சிமுறை இல்லை, ஒரு தனி மனித சர்வாதிகார ஆட்சி நாட்டில்நடக்கின்றதுஎன்பதற்கு இதுவேசிறந்தஉதாரணமாக இருக்கின்றது ஆகையினால் இந்த மோசமான சூழலிலே இப்படியான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற ஒரு விசேட சட்டத்தை கொண்டு வந்து ஆட்சியாளர்களுக்கு எதிராக நியாயமான எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற மக்களைஅடக்குவதற்கும்ஒடுக்குவதற்கும்தண்டிப்பதற்குமான செயற்பாட்டிலே இந்த ஆட்சி இறங்கி இருக்கின்றது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் இதனை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் - என்றார்.

## ஆட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டம் தர்மாபுரத்தை சேர்ந்த சசிகுமார் அவருடைய மனைவி உமாவதி மற்றும் அவரது இரண்டு மகள் மற்றும் அதேபகுதியை சேர்ந்த மகேந்திரன், பார்வதி மற்றும் அவரது பேரன்கள் என இரண்டு குடும்பத்தை சேர்ந்த 8 பேர் மன்னாரில் இருந்துபைபர் படகில் திங்கட் கிழமை இரவு புறப்பட்டு செவ்வாய்க்கிழமை காலை தனுஷ்கோடி அருகே உள்ள மூன்றாம் மணல் திட்டில் இறங்கினர்.

ஈழ அகதிகள் தரை இறங்கிய தகவலறிந்து மண்டபம் கடலோர காவல் படையினர் மூன்றாம் மணல் தீடையிலிருந்தவர்களை ஹோவர் கிராஃப்ட் படகு மூலம் மீட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்கு கொண்டுசென்றுராமேஸ்வரம் மரைன் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைக்கு பிறகு 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளமையே தாம் இந்தியா வரக்காரணம்என்றுஅகதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் பொருளாதார நிலைமை இன்னும் மாறவில்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கபட்டதாக அறிவிக்கப்பட்டாலும் உணவு பொருட்களின் விலை இன்னும் குறையவில்லை. எனவே பட்டினிச் சாவில் இருந்து உயிரை காப்பாற்றி கொள்ள, வாழ வழியின்றி தமிழ்நாட்டிற்கு அகதியாக வந்தோம் என உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையின்போது அகதியாகச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

இவர்களுடன் சேர்ந்து பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச்சென்றவர்களின் எண்ணிக்கை 232 ஆக உயர்ந்துள்ளது.

## வெடுக்குநாறி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன - மத ரீதியான வன்முறைகளுக்கு தற்போதைய ஆட்சி இடமளிக்காது. அமைச்சர் ஜீவன் தொண்டமானும் என்னோடு இணைந்து வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அதேபோன்று, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் சின்னம் பற்றிய அறிவிப்பு பலகை தொடர்பாக உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய நிலையில், குறித்த அறிவிப்பு பலகை தற்போது நீக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைவர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிக்குநாறி ஆதி லிங்க ஆலயத்தின் அனைத்து அடையாளங்களும் அழிக்கப்பட்டிருப்பது.

இந்தச் சம்பவம் காடையர்களால் மேற்கொள்ளப்பட்டதைப்போன்று காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஆட்சித் தரப்பின் ஏவலும், ஆதரவும் இல்லாது இந்த மோசமான செயலைச்செய்ய முடியாது.

ஆதி லிங்கத்தை மலையில் ஏறிச்சென்று வழிபடுவதற்காக அமைக்கப்பட்ட ஏணி தொடர்பில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து பூசகரும், அறங்காவலரும் கைது செய்யப்பட்டு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதனால் அந்த ஆலயத்தின் வழிபாடு சிலகாலம் தடைப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்த விடயம்.

குறித்த வழக்கில் நானும், சயந்தனும் விடயங்களை தெளிவுபடுத்தியதை அடுத்து கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நாம் ரணில் விக்கிரமசிங்கவினை சந்தித்தும் விடங்களைத் தெளிவுபடுத்தினோம்.

வெடுக்குநாறி மலையில் ஆதி லிங்க ஆலயம் இருந்ததும் அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டதும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அவ்விதமான நிலையில் மிலேச்சத்தனமாகக் குறித்த ஆலயம் தகர்க்கப்பட்டுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன்வவுனியாவில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

அதேநேரம், காங்கேசன்துறை கிரிமலையில் உள்ள ஆதிசிவன் ஆலயம் இடிதழிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வெடியரசன் கோட்டையிலும் அதே நிலைமை தான் காணப்படுகின்றது.

தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன் இவ்விதமான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றதை நாம் கண்டித்து வந்தாலும் அது நீடிக்கின்றது. தொல்லியல் திணைக்களத்தின் கடமை தொல்லியல் இடங்களை அடையாளப்படுத்துவதாகும். ஆனால் அத்திணைக்களம் தொல்லியல் இடங்களை ஒரு சமயத்திற்கும், இனத்திற்கும் உரியதாக அடையாளப்படுத்துகின்றது.

அவ்விதமான உரித்து தொல்லியல் திணைக்களத்திற்கு கிடையாது.

அண்மைக் காலமாக தொல்லியல் திணைக்களம் இவ்விதமான செயற்பாட்டை வடக்கிலும், கிழக்கிலும் மிகத் தீவிரமாகமுன்னெடுத்துள்ளது. தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை மீறி அத்திணைக்களம்செயற்படுகின்றது.

இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மட்டுமல்லவேறு சில நடவடிக்கைகளையும் மிகத்தீவிரமாக முன்னெடுப்பதற்கு தயாராகின்றோம் - என்றார்.

## அமைச்சுப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு-செலவுத்திட்டத்தின் பின் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதிவழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது நடக்கவில்லை. இப்போது சர்வதேச நாணய நிதியின் நிதி கிடைப்பதற்கான அதன் அனுமதி கிடைத்த பின் அமைச்சுப்பதவிகளை ஜனாதிபதி தருவார் என்று மொட்டுவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்பார்த்தார்கள். அதுவும் நடக்காது போலவே தெரிகின்றது. இதனால் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

ஓரிரு நாட்களுக்கு முன் மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அந்தச்சந்திப்பில் இந்தவிடயம் பேசப்பட்டது.

'ஜனாதிபதி அமைச்சுப் பதவி தரவில்லையென்றால் நாம் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் இல்லாவிட்டால் எதிர்க்கட்சியில் அமர வேண்டும்'- என்று அவர்கள் பஸிலிடம் கூறினர்.

'ஓரிரு நாட்கள் பொறுத்திருந்து பாப்போம். இல்லாவிட்டால் இதையே செய்வோம்' என்று பஸிலிடம் அவர்கள் தெரிவித்தனர்.

அதிலும் ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தனவுக்கு அமைச்சுப் பதவி கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்றும் பஸிலிடம் அவர்கள் வலியுறுத்தினர்.

## எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு நெருக்கடிகளின்றி விநியோகத்தினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அதேநேரம், போதியளவு எரிபொருள் இருப்புக்கள் இருப்பதாலும் விநியோகம் தொடரும் என்பதாலும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர - தெரிவித்தார்.

## நீக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டுக்களை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதேநேரம் பதவிவிலகப்போவதுமில்லை. என்னைபதவி விலக்குவதாக இருந்தால்நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புநடத்தவேண்டும் 113 வாக்குகள் இருந்தால் என்னை பதவி நீக்கலாம்.

எதிர்காலத்தில் அவ்வாறு செய்யப்படலாம். அந்தநாளுக்காகவே நான் காத்திருக்கின்றேன். எனக்கு அரசியல் செய்ய வேண்டியதில்லை. நாடாளுமன்றம் செல்ல வேண்டியதில்லை. முதலில் கருத்துக்களைவெளியிட்டவர் அமைச்சர்தான். அதற்குப் பதில்களை மட்டுமே நான் வழங்கினேன்.

ஆகவே, எந்தவிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் நான் இறுதி நாள் வரையில் பதவியில் இருப்பேன் - என்றார்.

## ரணிலுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இவர்கள்சிலநாட்களுக்குமுன் மைத்திரியைச் சந்தித்து இந்த விவகாரம் பற்றி விரிவாகப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் விளைவாக ரணிலும் மைத்திரியும் நாடாளுமன்றில்சந்தித்துப் பேசியுள்ளனர். இதற்கான ஏற்பாட்டை அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்தனர் என்று அறியக் கிடைத்துள்ளது.

அந்தச் சந்திப்பின்போது அரசில் இணைவதற்கான தனது விருப்பத்தை மைத்திரி தெரிவித்தார் என்று மைத்திரியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனைத்தொடர்ந்துதான் இப்போதெல்லாம் மைத்திரி மீண்டும் சர்வகட்சி அரசு பற்றி பேசத் தொடங்கியுள்ளார்.

ரணிலின் அரசுடன் இணைவதற்கு சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றார். அரசுடன் இணைந்துள்ள சு.க. உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் முடிவை எடுத்ததும் அவர்தான்.

அண்மையில்வெளிநாடு சென்றிருந்த தயாசிறி, சில தினங்களுக்கு முன்னர்தான் நாடு திரும்பியிருந்தார். அந்தச் சந்தர்ப்பதைப் பயன்படுத்தித்தான் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. விரைவில் அரசுடன் மைத்திரி இணையும் செய்தி வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெற்றோல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைவாக எரிபொருளை நிரப்புவது, பகிர்வது, உள்ளிட்ட அனைத்துச்செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால்நாடுமுழுவதும் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்திற்குஅனைவரும் ஒத்துழைப்புவழங்கியுள்ளனர். இதனால் எமது போராட்டம் வெற்றிகரமாக முன்னனெடுக்கப்படுகின்றது. இதனை புதன்கிழமையும் முன்னெடுப்போம். எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் வரையில் போராட்டத்தினை தொடர்வோம் - என்றார்.

முன்னதாக, சீனா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று நிறுவனங்களுக்கு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் கீழ் விற்பனை முகவர்கள் நடத்திச் செல்கின்ற 450 எரிபொருள் நிலையங்களை ஒதுக்கிக் கொடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்ததோடு இந்த நிறுவனங்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் புதிதாக தலா 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களைஅமைக்கவும்அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மூன்று நிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ள அனுமதிப்பத்திரம் ஊடாக, 20 வருடங்களுக்குஇலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை மேற்கொள்ளவும் களஞ்சியப் படுத்தவும் விநியோகிக்கவும் விற்பனைசெய்யவும்அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கானஉரிமையும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் கடும் தாக்குதலிற்குள்ளாகின. சில சந்தர்ப்பங்களில் தாக்குதல்கள் சட்டவிரோதமாக நடத்தப்பட்டதால்உயிரிழப்பும் காயங்களும் ஏற்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தன்னிச்சையாக கைது செய்யப்பட்டதோடு மிகவும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினைப் பயன்படுத்தி தடுத்து வைக்கப்பட்டனர் தடுப்பில் மிகமோசமாகநடத்தப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கான திருத்தங்கள் முக்கிய மனித உரிமை கரிசனைகளிற்குத்தொடர்ந்தும் தீர்வு காண்பதற்குத் தவறியுள்ளன. இந்தச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் முஸ்லிம்கள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகின்றனர்

உடன்பட மறுப்போர் மீதான ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைகள் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதிக்கு இறங்கியதும் துரிதமாக மோசமடைந்த ஆர்ப்பாட்டங்கள் அமைதியானவையாக காணப்பட்டபோதிலும் அதிகாரிகள் கருத்து சுதந்திரத்தையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளை பின்பற்றினார்கள்.

பல தடவைகள் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் ஆர்ப்பாட்டக்காரர்களை தன்னிச்சையாக கைதுசெய்தனர் சில வேளைகளில் பிடியாணை இல்லாமல்சீருடைஅணியாதவர்கள் கடத்தல் பாணியில் கைதுசெய்தல்களைமுன்னெடுத்துள்ளனர்.

கைதுகளிற்கான காரணங்களும்கைதுசெய்யப்பட்டவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான தகவல்களும் தெரிவிக்கப்படுவதில்லை. இதில் உறவினர்களின் கோரிக்கைகள் முற்றாக நிராகரிக்கப்படுகின்றன. எரிபொருளிற்காக வரிசையில் நின்றவர்கள் மீது அளவுக்கதிகமான தேவையற்ற பலப்பிரயோகம் இடம்பெற்ற சம்பவங்களும் உள்ளன

சித்திரவதைக்கு உட்படுத்தல், வலிந்து காணாமல் போகச்செய்யப்படுதல் விசாரணைகள்இன்றிநீண்ட காலமாக தடுத்துவைத்தல் போன்வற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் அரசாங்கம் அதனை பயன்படுத்தப்போவதில்லை என்ற உறுதிமொழிக்கு மத்தியிலும் தொடர்ந்தும்அச்சட்டத்தினை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

ஐ.நா.வின் முக்கிய முடிவெடுக்கும் அமைப்பான பாதுகாப்பு சபையின், பாரம்பரியமாக புறக்கணிக்கப்பட்ட நாடுகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு, குறிப்பாக உலகளாவிய தெற்கிற்கு குரல் கொடுப்பதற்காக மறுசீரமைக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை, அழைப்பு விடுக்கிறது என்றுள்ளது.

## உண்மை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுக்கள்நியமிக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுக்கள் பல்வேறு அமர்வுகளைநடத்திஅறிக்கைகளைத் தயாரித்துள்ளன. அதில் பல பரிந்துரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆட்சியாளர்க் சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைத்தான் பகிரங்கமாக்கினர். சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வெளியிடாது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

என்னைப் பொறுத்த வரையில் ஆட்சியாளர்கள் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால், ஏற்கனவே தாம் அமைத்த ஆணைக்குழுக்களின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தப் படுத்தவேண்டும்.

அவ்வாறில்லாதுமீண்டும் ஒரு ஆணைக்குழுவை அமைக்கமுயல்வது எதற்காக என்ற கேள்வி எழுக்கின்றது. நாட்டில்போதுமானஅளவிற்கு ஆணைக்குழுக்களும், அறிக்கைகளும் காணப்படுகின்றன - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டு மக்களை எதிர்த்துக்கொண்டு அரசாங்கம் ஐ.எம்.எவ். நிபந்தனையை அமுல்படுத்தமுடியாது!

## சம்பிக்க சுட்டிக்காட்டு



சர்வதேசநாணயநிதியம் முன்வைத்துள்ள கடினமான நிபந்தனைகளை சபிக்கவும் முடியாது, மனதாற ஏற்கவும் முடியாது, நிராகரிக்கவும் முடியாது. கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்த சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கோரிக்கைகளுக்கு பேச்சு ஊடாக தீர்வு காண்பதற்கு பதிலாக அரசாங்கம் அரசபல பிரயோகத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. நாட்டு மக்களை எதிர்த்துக்கொண்டு சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக அமுல்படுத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

பத்தரமுல்லை பகுதியில் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு சம்பிக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் தேசிய சபை ஸ்தாபிக்கப்பட்டு பொருளாதார ஸ்தீரப்படுத்தல் உபகுழு உருவாக்கப்பட்டது.

பொருளாதார மீட்சிக்காக இனங்காணப்பட்ட தொழிற்துறையினருடன் பேச்சுகளை மேற்கொண்டு விரிவான அறிக்கையை தேசிய சபைக்கு சமர்ப்பித்துள்ளோம்.

அறிக்கையின் உள்ளடக்கங்களை அரசாங்கம் முழுமையாக செயற்படுத்த வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது என அரசாங்கம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து வங்குரோத்து நிலையின் தன்மையை நாட்டு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் எதிர்கொண்டார்கள்.

நாடு வங்குரோத்து அடைவதற்கு நாங்கள் என்ன செய்தோம். ஆட்சியாளர்களின் முறையற்ற நிர்வாகத்தாலும், ஊழல் மோசடியாலும் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது எனக் கருதி நாட்டு மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆட்சியாளர்களை விரட்டியடித்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எடுத்த தூரநோக்கமற்ற தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டன. ஆனாலும், நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு செல்லவில்லை.

ரூபா மற்றும் டொலர் ஊடாக வரவு - செலவுக்கு இடையில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது.

1954 ஆம் ஆண்டுக்கு பின்னர் வரவு - செலவுத் திட்டபற்றாக்குறைதீவிரமடைந்தது. அரச செலவுக்கும் வரவுக்கும் இடையில் பற்றாக்குறை காணப்படும்போது கடன் பெற்று அரச செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டன.

இறுதியில் 2012 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட 10 ஆயிரம் மில்லியன் டொலருக்கான தவணை கடன் தொகையை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் வங்குரோத்து நிலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச வருமானம் 3500 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய வாழ்க்கை செலவுகளை அடிப்படையாக கொண்டு அரச செலவு 11500 பில்லியன் ரூபாவாக உயர்வடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வரவு 3500 பில்லியனாக காணப்படும்போது செலவு 11500 பில்லியனாக உயர்வடைகையில் வங்குரோத்து நிலையை அறிவிப்பதை தவிர மாற்று வழிகள் ஏதும் கிடையா.

இவ்வாறான பின்னணியிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

2032 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு சர்வதேச நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. இந்த நிபந்தனைகளை சபிக்கவும் முடியாது, முழுமையாக ஏற்கவும் முடியாது, இரத்து செய்யவும் முடியாது.

10 பிரதான நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த காலங்களைப்போன்று இம்முறையும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்ற முடியாது.

2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் மொத்த தேசிய உற்பத்திகளை 2.3 சதவீதத்தால் அதிகரித்துக்கொள்ள வேண் டும். அத்துடன் குறுகிய காலத்துக்குள் தேசிய வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இதற்கமைய 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் மொத்த தேசிய வருமானத்தை 15.3 சதவீதத்தால் அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் லிபரல் கொள்கையை பின்பற்றியவர்களால் 12 சதவீதமாக காணப்பட்ட தேசிய வருமானம், 8 சதவீதமாக வீழ்ச்சி நிலைக்கு தள்ளப்பட்டது.

2026 ஆம் ஆண்டு அரச செலவுகள் 19.4 வீதத்தால் குறைக்கப்பட வேண்டும்.

மொத்த தேசிய உற்பத்திகளை குறுகிய காலத்துக்குள் அதிகரித்துக்கொள்வது இலகுவானதொரு காரியமல்ல, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய சராசரி நிதி அவசியத்தை 13 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டுமாயின், தேசிய கடன் அறவீட்டை குறைந்த மட்டத்தில் நீக்க வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம், வங்கி வைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து பட்டாசு வெடித்து கொண்டாடி பெருமைகொள்வது அவசியமற்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்த சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து அரசாங்கம் பயணிக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு பதிலா கத் தன்னிச்சையாக செயற்படுகிறது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்துள்ளதன் பின்னணியில் அதன் பயனை நாட்டு மக்களுக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

எரிபொருள் தாங்கி ஒன்றின் விலை 70 டொலராக காணப்படும் நிலையில் தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலை குறைக்கப்படவில்லை.

மறுபுறம் மின்சார கட்டணம் 300 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் எரிபொருள் விலை மற்றும் மின்கட்டண அதிகரிப்பால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை அதிக இலாபம் பெறுகின்றன என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# எரிபொருள் விலையை குறைந்தது 120 ரூபாவால் குறைக்க வேண்டும்!

## ஐக்கிய கூட்டு தொழிற்சங்க சக்தி வலியுறுத்து

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி உயர்வால், அரசாங்கம் எரிபொருள் விலையை குறைந்தபட்சம் 120 ரூபாவால் குறைக்க வேண்டும் என ஐக்கிய கூட்டு தொழிற்சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்தபாலித தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறவுள்ள எரிபொருள் விலைத் திருத்தத்தின் போது, நுகர்வோர்களால் உணரக்கூடிய வகையில், விலைகள் கணிசமான அளவு குறைக்கப்படும் என கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார். அந்த கணிசமான அளவு 100 ரூபாவுக்கு அதிகமாக இருக்க வேண்டும், ஆனால் விலையை 50 ரூபா குறைப்பது சுரண்டல் என்றும் ஐக்கிய கூட்டு தொழிற் சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அதிக நன்மைகளை வழங்க வேண்டும் என்று அரசாங்கம் நினைத்தால் எரிபொருள் விலையை 100 ரூபாவால் குறைக்க வேண்டும் என்றும் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மிகச் சரியான கேள்வி

இலங்கையில் இனங்களுக்கு இடையேயான பிணக்கைத் தீர்ப்பதற்கும் கடந்த காலத்தில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புச் சொல்வதற்குமாக உண்மை அறியும் ஆணைக்குழு ஒன்றை உருவாக்கப்போவதாக ஆட்சித் தரப்பில் தொடர்ச்சியாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் வார்ட் பல்கலைக்கழகத்தில் மெய்நிகர் வழி ஆற்றிய உரையில்கூட அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உண்மை அறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். அதற்கு முன்னதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவும் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் இது விடயமாகத் தென்னாபிரிக்காவுக்குச் சென்றிருந்தார்கள். அந்த நாட்டில் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட உண்மை அறியும் ஆணைக்குழு பற்றிய அனுபவங்களையும் சவால்களையும் அவர்கள் கேட்டறிந்தார்கள் என்று சொல்லப்பட்டது.

இந்த உண்மை அறியும் ஆணைக்குழு தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் இதுவரையில் எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவீல்லை. தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம்கூட அது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை. அப்படியொரு ஆணைக்குழு அமைக்கலாமா என்கிற கேள்வியைக்கூட கொழும்பு தமிழ் மக்களிடம் கேட்கவில்லை. தன்னிச்சையாக இத்தகையதொரு ஆணைக்குழுவை அமைப்பதற்கு முடிவெடுத்து, அதற்ககான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. தனது விருப்பத் தெரிவை தமிழ் மக்கள் மீதான திணிப்பாகக் கொண்டு வருவதற்கு முயல்கின்றது.

இத்தகைய நிலையில்தான் மனித உரிமைகள் ஆர்வலரான அம்பிகா சற்குணநாதன் இந்த உண்மை அறியும் ஆணைக்குழு தொடர்பில் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளார். அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றியவர். இலங்கையின் மனித உரிமைகள் விடங்கள் தொடர்பில் ஆழமான அறிவையும் பார்வையையும் கொண்டவர்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் போரில் என்ன நடந்தன என்று ஆராய்வதற்காகப் பல அரசுத் தலைவர் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்ட நிலையில் அவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத ஆட்சியாளர்கள் புதிதாக ஏன் ஒரு ஆணைக்குழுவை அமைக்கவேண்டும் என்பதுதான் அவரது கேள்வி.

”இலங்கையில் ஏற்கனவே பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுக்கள் பல்வேறு அமர்வுகளை நடத்தி அறிக்கைகளைத் தயாரித்துள்ளன. அதில் பல பரிந்துரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆட்சியாளர்க் சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைத்தான் பகிரங்கமாக்கினர். சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வெளியிடாது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால், ஏற்கனவே தாம் அமைத்த ஆணைக்குழுக்களின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தப்படுத்தவேண்டும். அவ்வாறில்லாது மீண்டும ஒரு ஆணைக்குழுவை அமைக்க முயல்வது எதற்காக என்ற கேள்வி எழுக்கின்றது. நாட்டில் போதுமான அளவிற்கு ஆணைக்குழுக்களும், அறிக்கைகளும் காணப்படுகின்ற” என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அது சரியான கேள்விதானே. பரணவிதான ஆணைக்குழு முதற்கொண்டு இதுவரையில் நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் இந்த ஆணைக்குழு அறிக்கைக்கு மட்டும் என்ன நடந்துவிடப்போகின்றது?

# வாக்குரிமையைவிட மக்கள் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கே முன்னுரிமை அளிக்கவேண்டும்

### ராஜித சேனாரத்ன கோரிக்கை



பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவற்றிலிருந்து மீள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததன் பின்னர், எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தேர்தலையும் நடத்த முடியும்.

வாக்குரிமையை விட மக்கள் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வாக்குரிமையை விட மக்கள் வாழ்வதற்கான உரிமைக்கே முன்னுரிமையளிக்க வேண்டும். நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அவற்றிலிருந்0து மீள்வதற்கான சூழலை நாட்டில் தோற்றுவித்தன் பின்னர், எந்தவொரு தேர்தலையும் நடத்த முடியும்.

எரிபொருள், மின் கட்டணம், வரி உள்ளிட்டவை குறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் போலியான மாயாஜாலங்களைக் காண்பிக்காது மக்களுக்கு நடைமுறை சாத்தியமாக சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கமைய பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருகின்றன. எனினும் அவற்றுக்கு நிகராக சுகாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்து வருகிறது.

மருந்து இன்மையால் நாளாந்தம் உயிரிழக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது. இந் நிலைமையை மீளக் கட்டியெழுப்புவதற்கு எனக்கு அழைப்புவிடுக்கப்பட்டால் அது தொடர்பில் நான் அவதானம் செலுத்துவேன்.

சர்வதேச நாணய நியத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள கடன் உதவியில் குறித்த தொகை முக்கியத்துவமுடையதல்ல. அதனால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ள உத்தரவாதமே முக்கியத்துவமுடையதாகும்.

இந்த ஒத்துழைப்பால் வங்குரோத்து நிலைமையிலிருந்து நாடு மீண்டுள்ளது. ஜனாதிபதியினதும், எமது நிலைப்பாடுகளும் ஒருமித்தவையாகும். எனினும் நாம் இருவேறு திசைகளிலுள்ளோம். - என்றார்.

# அடுத்த ஜனாதிபதியாக சஜித்தே தெரிவாவார்

### அஷோக அபேசிங்க அபரிமித நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 29

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெற முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எண்ணுகின்றார். எந்தக் கட்சியில் யார் வேட்பாளரானாலும் சஜித் பிரேமதாஸவே அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதாகும். பொதுஜன பெரமுனவிலுள்ள கொள்ளையர்களுடன் இணைந்து போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெற முடியும் என அவர் எண்ணுகின்றார். ஐ.தே.கவில் மாத்திரமல்ல. எந்த கட்சியில் யார் வேட்பாளரானாலும் சஜித் பிரேமதாஸவே அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

200 ரூபாவை விடக் குறைவாகக் காணப்பட்ட எரிபொருள் விலையை 500 ரூபா வரை அதிகரித்து , பின்னர் மீண்டும் விலைகளைக் குறைக்கும் போது அப்பாவி மக்கள் ஏமாறுகின்றனர். இவ்வாறு மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார். டொலர் பெறுமதியின் உயர்வு மற்றும் வீழ்ச்சி என்பவற்றிலேயே இவை தங்கியுள்ளன. இது வழமையானதாகும். யார் ஆட்சிக்கு வந்தாலும் இவை வழமை போன்று இடம்பெறும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப் பெற்றுள்ளமை மகிழ்ச்சிகுரியதாகும். எனவே, தான் வெளிநாட்டு தூதுவர்களையும், இராஜதந்திரிகளையும் அழைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார். எவ்வாறிருப்பினும் நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி கிடைக்கப் பெற்றுள்ளது என்பதற்காக மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிக்கப் போவதில்லை. - என்றார்.

# நாட்டில் ஜனநாயகம் மறுக்கப்பட்டால் மக்கள் உரிமைகளை உறுதிப்படுத்துவர்

### இரா.சாணக்கியன் இடித்துரைப்பு



தேர்தல்களை பிற்போட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளில் கைவைத்தால் மக்கள் தமது உரிமைகளை உறுதிப்படுத்த முனைவார்கள் என்பதை ஜனாதிபதி சிந்தித்து செயற்படவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர், பிரதேச அபிவிருத்திக்குழு தலைவர், பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களை நடத்தாது மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் முன்னெடுத்துவருகின்றார்.

பொதுமக்களின் நன்மை கருதியில்லாமல் அவர் காணி ஏதாவது விற்பனை செய்வதற்கே அவசரமாக மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றார். - என்றார்.

# கண்காணிக்கக் குழு அமைக்கும் அரசின் முடிவுக்கு ஒருபோதும் இணங்க முடியாது

### ரோஹன ஹெட்டியாரச்சி திட்டவட்டம்

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை கண்காணிப்பதற்கு குழுவொன்றை அமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இணங்க முடியாது.

அவ்வாறானதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்குமானால், தேர்தல் இடம்பெறுவது மேலும் பிற்படுத்தப்படும் என்பது தெளிவாகின்றது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாள் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை கண்காணிப்பதற்கு அரசாங்கம் குழுவொன்றை அமைப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மாகாணசபைகளைக் கண்காணிப்பதற்கும் உள்ளூராட்சி மன்றங்களைக் கண் காணிப்பதற்கும் குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் பிரேரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

எந்தவொரு தேர்தலையும் அண்மைக்காலத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் எந்த தயாரும் இல்லை என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது.

அதேபோன்று கண்காணிப்பு குழு அமைப்பதன் மூலம் நிறைவேற்றுத்துறை இந்த நிறுவனங்களின் அதிகாரங்களை மீண்டும் தனது கையில் வைத்துக்கொள்ளும் நிலையே ஏற்படுகிறது. இவ்வாறான நிலைமை ஜனநாயக நாடொன்றுக்கு எந்த வகையிலும் பொருத்தம் இல்லை.

அதனால் நாட்டின் ஜனநாயகம், அதிகாரப் பரவலாக்கம், அபிவிருத்தி சமநிலையைப் பாதுகாத்துக்கொள்ளும் அதிகாரம் இருப்பது நாடாளுமன்றத்துக்காகும்.




அதிகாரங்கள் தனி ஒருமனிதனை சுற்றி இருப்பது எந்த வொரு நாட்டுக்கும் நன்மையாக அமையப்போவதில்லை. அதனால் இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனம் செலுத்தப்படவேண்டும்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் இருக்கும் ஆளும் எதிர்க்கட்சி யாராக இருந்தாலும் அரசாங்கத்தின் இந்த தீர்மானம் ஒரு தரப்பினருக்கு நல்லதாக இருந்தாலும் நாடு என்றவகையில் ஜனநாயகத்தின் பெறுமதியைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பாக ஒன்றாக செயற்பட வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இதனை உங்களால் பாதுகாக்க முடியாமல் போனால் எதிர்காலத்தில் இதன் பெறுபேறு உங்களுக்கு எதிராகவே அமையும். ஏனெனில் ஜனநாயக தேர்தல் முறையில் அடுத்த முறை நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டி ஏற்பட்டால் இதன் பாதிப்பு உங்களுக்கே ஏற்படும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொல்பொருள் திணைக்கள உதவியுடனேயே வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலயம் அழிப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு



வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்துஆதிலிங்கம் ஆலயம் அழிக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம் பெற்றுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த மூன்று வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதையும், திருவிழாக்கள் செய்வதையும் பொலிஸார ஊடாகத் தொல்பொருள் திணைக்களம் தடை விதித்துள்ளது.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக இங்கு திருவிழா செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அதன் அடிப்படையில் தற்போது மூன்று தினங்களுக்கு முன்பு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரஆலயத்தில் இருக்கும் அனைத்து விக்கினங்களும் உடைத்து எரியப்பட்டுள்ளது.குறித்த நடவடிக்கையானது படைத்தரப்பினரால்இடம்பெற்றுள்ளதாக அறிகின்றேன்.

தொல்பொருள்திணைக்களத்தில் உதவியுடன் வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி,அதனை விகாரையாக்குவதற்காக அவர்கள் தொடர்ச்சியாக இரண்டுவருடங்களுக்குமேல் முயற்சி செய்து வந்தார்கள்.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அதேபோல் வடக்கு - கிழக்கில் இருக்கும் தமிழர்களின் மத அடையாளங்களை அழித்து மிகத் தீவிரமாக பௌத்த மயமாக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.

இத்தகைய செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.தொல்பொருள் திணைக்களம்தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் குறித்த செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரஆலயம்தாக்கப்பட்டு உடைக்கப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைகாலை9.30 மணிக்குவவுனியாகந்தசாமி ஆலயம்முன்பாகஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வவுனியா மாவட்டச்செயலகத்தை வந்தடைய உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார்.

# இலங்கையின் 17 ஆவது சபாநாயகர் ஜோசப் மைக்கல்பெரேரா காலமானார்

நாடாளுமன்றத்தின் 17 ஆவது சபாநாயகராக பதவி வகித்த ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று (செவ்வாய்க்கிழமை) தனது 82 ஆவது வயதில் காலமானார். 2001 டிசெம்பர் முதல் 2004 பெப்ரவரி வரை அவர் சபாநாயகராக பதவி வகித்துள்ளார். 1941 செப்ரெம்பர் 15ஆம் திகதி பிறந்த அவர், 1964 இல் ஜா எல நகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

1964 - 1967 ஜா எல நகர சபைக்கு உறுப்பினராக பணியாற்றிய அவர், 1967 - 1970 ஜா எல நகர சபையின் உப தலைவராக நியமனம் பெற்றார். 1970 - 1971ஜா எல நகர சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1971-1976 ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை அமைப்பாளராக செயற்பட்டிருந்தார். 1976 - 1977 முதல் தேசிய மாநில சட்ட சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977 - 1978 இரண்டாவது தேசிய மாநில சட்டசபைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1978 - 1988 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது நாடாளுமன்றத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.






# பட்டதாரி யுவதி வெட்டிக்கொலை இரத்தினபுரியில் பயங்கரம்

பட்டதாரி யுவதி ஒருவர் இரத்தக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, நிரிஎல்ல பகுதியில் 25 வயதுடைய யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொழில் நிமிர்த்தம் வீட்டிலிருந்து சென்ற அவர், பாலம் ஒன்றுக்கு அடியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புதிய பாணியிலான முயற்சில் 83 வயதில் ஈடுபடும் மூதாட்டி



(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்டம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் வசிக்கும் சின்னராசா - பாக்கியம், என்னும் 83 வயது மூதாட்டியின் புதிய முயற்சி பலராலும் வியப்பாகப் பார்க்கப்படுகின்றது.

6 பிள்ளையின் தாயாரும் 16 பேரப் பிள்ளைகளைக் கண்டவருமான இந்த மூதாட்டி, ஓய்வு நேரங்களில் கைப் பணிகளில் ஈடுபடுகின்றார்.

அதுவும் மாறுபட்ட முயற்சியாக வர்த்தக நிலையங்களில் பெரும் பொருட்களைப் பொதி செய்யப் பயன்படுத்தப்படும் பட்டியை (பார்சல் டேப்) எடுத்து அதிலிருந்து கடகம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

பனையோலையில் பெட்டி இழைப்பதைப் போன்றே இந்த நார் இழையிலிருந்தும் இந்த மூதாட்டி அழகிய கடகங்களை இழைக்கிறார். இது பார்ப்பவர்களை ஆச்சரியப் படுத்துகின்றது.

# மாணவனுக்கு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு



சுன்னாகம், மார்ச் 29

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில், இந்திய ரோட்டரிக் கழகங்களின் நிதிப் பங்களிப்பில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேவைப்பாடுடைய மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டது.

இந்திய ரோட்டரிக் கழக மாவட்ட ஆளுநர் ரோட்டரியன் திரு.பழனி, இந்திய முன்னாள் ரோட்டரிக் மாவட்ட ஆளுநர் சம்பத் குமார மற்றும் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# பதில் ஊடக அமைச்சராக சாந்த பண்டார நியமனம்



அமைச்சர் பந்துல குணவர்தன தற்போது வெளிநாட்டில் இருப்பதால் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஊடகத்துறையின் பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

# ஆதிலிங்கேஸ்வரர் மாயமான பின்னணியில் அரசு உள்ளது

## வி.மணிவண்ணன் குற்றச்சாட்டு

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சேதமாக்கப்பட்ட சம்பவத்தில் அரசாங்கத்தின் பின்னணி இருப்பதாக யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம், முற்று முழுதாக மத பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி, அதனூடாக சிலர் அரசியல்இலாபத்தைஅடைய எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்ப் பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் வலியுத்தியுள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

அகவை அறுபதில் மணி விழா வாழ்த்து



கௌரவ கலாநிதி எஸ்.வி.சிறிதரன்

இன்று (29 – 03 – 2023) தனது அறுபதாவது அகவையில் மணிவிழாக் காணும்
எமது நிறுவனங்களின் உரிமையாளரும்
'தாயகம்' அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகருமான

கௌரவ கலாநிதி எஸ்.வி.சிறிதரன்
அவர்கள் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ்ந்து
தமது அறப்பணிகளைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

பணியாளர்கள்,
கொனிகா கலர் லாப் நிறுவனம்,
சிறிராம் ஜுவல்லர்ஸ் நிறுவனம்,
யாழ்ப்பாணம்

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்: ஏப்ரலில் பொது இணக்கப்பாடு வரும்

**அஜித் மான்னப்பெரும எம்.பி. நம்பிக்கை**



நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி கடலில் முழுமையாக மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரமளவில் பொது இணக்கப்பாட்டுக்கு வர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடற்துறை தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் அஜித் மான்னபெரும தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

2021 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்புக்கு அண்மையில் நீர்கொழும்பை அண்டிய கடற்பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பல் தீ விபத்துக்கு உள்ளாகி கடலில் முழுமையாக மூழ்கியது.

இந்த தீ விபத்தால் கடல் வளத்துக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு குறித்த நிறுவனத்தில் இருந்து நட்ட ஈட்டை பெற்றுக்கொள்வதற்கு வழக்குதாக்கல் செய்யும் விடயத்தில் இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரமளவில் பொது இணக்கபாட்டை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல் விபத்து தொடர்பில் நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய ஆய்வு அறிக்கையை



சுற்றாடற்துறை தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வை குழுவில் பரிசீலனை செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கப்பல் மூழ்கிய பகுதிக்கு சென்று ஆய்வு அல்லது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்சிக்கல் காணப்படுகிறது. ஆகவே சகல தரப்பினருடன் இணக்கப்பாட்டுடன் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணத் தீர்மானித்துள்ளோம்.என்றார்.

# இரத்தினபுரியில் மற்றுமொரு பெண் வெட்டிப் படுகொலை

இரத்தினபுரியில் மற்றுமொரு பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - பட்டுகெதர பிரதேசத்தில் வீடொன்றுக்குள் வைத்து 70 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.உயிரிழந்த பெண்ணும் அவரது மூத்த சகோதரியும் அந்த வீட்டில் தங்கியிருந்த நிலையில், இன்று(28) அதிகாலை ஒரு குழுவினர் வீட்டுக்குள் நுழைந்து பணம் மற்றும் தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டுள்ளனர்.

அதன்பின்னர் அக்குழுவினர், குறித்த பெண்ணைக் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்து விட்டு மூத்த சகோதரியைத் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

# கர்ப்பிணிகள் கொடுப்பனவை தாமதமின்றி வழங்குங்கள்

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் முன்பள்ளிச் சிறார்களுக்கான நகரசபையின் ஒதுக்கீடுகளை எதிர்வரும் காலங்களில் விரைவுபடுத்தி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

சாவகச்சேரி நகரசபையின் கடந்த வருட வரவு-செலவுத்திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கவும் முன்பள்ளிகளுக்கு உதவிப் பொருட்கள் வழங்கவும் நிதி ஒதுக்கி இருந்தோம். ஆனால் அவை நீண்ட இழுபறியின் பின்னர் அண்மையிலேயே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

நகரசபையின் 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்திலும் கர்ப்பிணித் தாய்மார்கள், முன்பள்ளிகள் மற்றும் முதியவர்களுக்கு விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த உதவித்திட்டங்களை வழங்குவதற்கான அனுமதிகளை உரிய இடங்களில் பெற்று விரைவாக அவை பயனாளிகளைச் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் கடந்த காலங்களில் நகரசபை ஊடாக அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கிய சில ஒதுக்கீடுகளை சபைக்கு தெரிவிக்காமல் வருமானத்திற்கு மாற்றியமையால் ஒருசில அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போயிருப்பதாகவும் மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களு ம் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை 28.03.2023 கதிர் 11

## ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ரணில்

### மறைமுகமாக உறுதிப்படுத்தியது ஐ.தே.க.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளது.

எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைப் போட்டி இருக்காது.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் உபதலைவரும் முன்னாள் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

எமது கட்சித்

## ஐக்கிய தேசியக் கட்சியில் இணைகின்றார் எஸ்.பி.



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும், அடுத்து நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலின் கீழ் தான் அவர் போட்டியிடுவார் எனவும் தெரியவருகின்றது.

விரைவில் நடைபெறும் அமைச்சரவை மறுசீரமைப்பின் போது, எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு அமைச்சுப் பதவி ஒன்றும் வழங்கப்படவுள்ளது.

எது எப்படி இருந்தாலும் இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை.

## அரசியலுக்கு 'குட்பாய்' ரோஸி திடீர் அறிவிப்பு



அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணத்துடனேயே இருக்கின்றேன். இம்முறை மாத்திரமே தேர்தலில் போட்டியிடுகின்றேன். இனி போட்டியிடப்போவதில்லை.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயருமான ரோஸி சேனாநாயக்க

# உள்ளூராட்சி சபைகளின் சேவைகளை இனி 24 மணி நேரமும் வழங்க திட்டம்

### இராஜாங்க அமைச்சர் வக்கும்புர தெரிவிப்பு

(தன்வீர்)

உள்ளூராட்சி மன்றங்களின் சேவையை 24 மணி நேரமும் வழங்குவதற்குஏற்றவகையிலான மாற்றங்களை இந்த ஆட்சி செய்யப்போகின்றது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களை 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடுத்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார் அவர்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

340 உள்ளூராட்சி மன்றங்களில் பொதுமக்கள் இல்லாத நிலையில், அக்கட்டமைப்புக்களின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

காலநிலை மாற்றங்களால் பல்வேறு பிரச்சினைகளுக்கு பொதுமக்கள் முகங்கொடுக்க நேருகின்றது. மழைவெள்ளம், மண்சரிவு என்பன இரவு,பகல் என்று இல்லாது இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.


இதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குமுகங்கொடுப்பதற்காக வெறுமனே 8 மணி நேரத்திற்குச் சேவை வழங்கும் கட்டமைப்பாக இல்லாது 24 மணி நேரத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களைச் செயற்பட வைப்பதே நோக்கமாகவுள்ளது.

இதுதொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்களுக்கு சுற்றறிக்கை ஊடாக தெளிவுபடுத்தப்படவுள்ளதோடு அதற்காக அவர்களுக்கு விசேட கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது - என்றார்.



## இந்திய முட்டைகள் இன்னும் துறைமுகத்திலேயே உள்ளன

### வெளியே வர அனுமதி வழங்கப்படவில்லை



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழி முட்டைகளை கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான உரிய அனுமதிகள் இன்னமும் கிடைக்கவில்லை என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ விசனம் வெளியிட்டார்.

"பொது மக்களுக்காக முட்டை இறக்குமதி செய்யப்பட்டதே தவிர, எனது வீட்டுப் பாவனைக்காக அது இறக்குமதி செய்யப்படவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

வெலிமடையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் நான் விடுதி ஒறுக்குச் சென்றேன். காலையிலேயே அங்கு சென்றிருந்தமையால் பாணும், ஒம்லெட் ஒன்றும் காலை உணவுக்காகக் கோரினேன். உணவு தயாரிக்கப்பட்டுவந்தவுடன், குறித்த பணியாளரிடத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு இருக்கிறதா என்று கேள்வியெழுப்பினேன்.

அப்போது, அவர் இருந்த மூன்று முட்டைகளில் இரண்டை எனது உணவுக்காக அளித்ததாகவும் ஒன்று எஞ்சியிருப்பதாகவும் கூறினார். நாம் அந்நியச்செலாவணியை அதிகரிப்பதற்காக

## ஆளும் கட்சி அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளது

### தேர்தல் நடத்தாமைக்கான காரணத்தை அம்பலப்படுத்தினார் சரித்த ஹேரத்

ஆளும் கட்சி அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளமையால் மக்கள் முன்னால் மீண்டும் செல்வதற்கு அச்சமடைந்துள்ளது, இதனாலேயே தேர்தலை நடத்தாது காலம் தாழ்த்துகின்றது என்று சுதந்திர மக்கள் சபையின் அங்கத்தவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரித்தஹேரத் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் இன்று முற்பகல் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து, நாட்டின் பொருளாதார நிலைமைகள் மீட்டெழுந்து விட்டதாகவும் சுமூகமான நிலைமைகளை அது அடைந்து விட்டதாகவும் கூறுகின்றார்.

மறுபக்கத்தில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றபோது நாடு வங்குரோத்தில்உள்ளதாகவும் தேர்தலை நடத்துவதற்கு பணமில்லை என்றும் கூறுகின்றார்.

நாட்டின் சுமூகமான நிலைமையை உருவாக்குவதற்கும், ஏனைய துறைகளின் இயக்கத்திற்கு நிதி உதவியை வழங்கவும் முடிந்த ஜனாதிபதியால் வெறுமனே 10 பில்லின் ரூபாயை ஒதுக்கீடு செய்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த முடியாதுள்ளது.

உண்மையிலேயே நாடு வங்குரோத்தில் இல்லை. ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஆட்சியே வங்குரோதத்தில் உள்ளது.

அவரது அரசு அரசியல் ரீதியான வங்குரோத்தினை அடைந்துள்ளது.

இதனால் மக்கள் முன் செல்வதற்கு அந்த மக்களின் ஆதரவை வெல்வதற்கு அவர்களால் முடியவில்லை. அதனாலேயே தேர்தலை பிற்போட்ட வண்ணமுள்ளனர் – என்றார்.

## விபத்தில் சிறுவன் இறப்பு

மட்டக்களப்பு, காத்தான்குடியில் இடம்பெற்றவாகன விபத்தில் 17 வயது சிறுவன் உயிரிழந்தான். காத்தான்குடியிலிருந்து மட்டக் களப்பு நோக்கிப் பயணித்த சைக்கிள் ஒன்று நாவற் குடா பகுதியில் வான் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து

## கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் திறப்பு

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் இன்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவினால் மக்கள் பாவனைக்கு

## ஏப்ரல் 4 மீண்டும் கூடுகிறது தேர்தல்கள் ஆணைக் குழு




ஏப்ரல் மாதம் நான்காம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடவுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஏப்ரல் 25 நடத்து-வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அந்தத் தினத்தில் தேர்தலை நடத்தமுடியாமல் ஆட்சியாளர்கள் தடுத்துவிட்டனர். தேர்தல் பணிகளுக்கான நிதியை விடுவிக்காது நிறுத்தியதன் மூலம் தேர்தல் தடுக்கப்படுகின்றது.

"நிதியை விடுவிக்கும்படி கேட்ட எமது கோரிக்கைகள் தொடர்பில் எந்தப் பதிலும் தரப்படவில்லை. இதனால் ஏலவே தீர்மானிக்கப்பட்டதன்படி இன்றையதினம் தபால் மூலமான வாக்களிப்பைக் கூட நடத்த முடியாது போயுள்ளது.

இந்த நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் ஏப்ரல் 4 கூடி ஆய்ந்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அதேநேரத்தில் நாம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் கலந்தரையாட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரும், பிரதமருமான தினேஷ் குணவர்த்தனவுக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். அக்கலந்துரையாடல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றோம்" – என்றார்.

## மார்ச் 30 போராட்டத்திற்கு அனைவருமே வாருங்கள்

### மாவை அழைப்பு

மார்ச் 30 வவுனியாவில் இடம்பெறும் மாபெரும் போராட்டத்திற்கு இன, மத, கட்சி பேதம் பாராது அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கம் உட்பட விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பில் திங்கட்கிழமை ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடினேன்.

அவர் குறித்த விடயம் தொடர்பில் விவரமாக தனக்கு அனுப்பி வைக்குமாறு கோரி இருந்தார்.

அதன் அடிப்படையில் நேற்றிரவு அவசரமாக அவருக்கு கடிதம் மூலம் உள்ள பிரச்சினைகளைத் தெளிவாக எழுதி அனுப்பி இருக்கின்றேன்

இந்தப் படு பாதகச் செயலைக் கண்டித்து நாளைமறுதினம் வவுனியாவில் பெரும் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது அந்த போராட்டத்தில் நாங்கள் அனைவரும் கலந்து கொண்டு எமது எதிர்ப்பினை வெளிப்படுத்தவேண்டும் குறிப்பாக வெடுக்குநாறி மலை விடயம் மாத்திரமல்லாது வடபகுதியில் உள்ள ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் நாம் எமது எதிர்ப்புக் குரலை ஆணித்தரமாகப் பதிய வைக்கவேண்டும் – என்றார்.



## ஹெரோயின் குற்றச்சாட்டில 9 பேர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பில் இருவர் கைது செய்யப்பட்டனர் இதனையடுத்து இன்று காலை இடம்பெற்ற சுற்றிவளைப்பில் மேலும் 7 பேர் கைதுசெய்யப்பட்டனர்

## மத முரண்பாட்டை ஏற்படுத்தவே கச்சதீவில் புத்தர் சிலை அமைப்பு


### கண்டித்து இந்திய நாடாளுமன்றில் விவாதம் கேட்கிறார் திருமா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

கச்சத்தீவில் மத முரண்பாட்டை உருவாக்கும்நோக்கத்தில்புத்தர்சிலையை நிறுவியுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன் இது தொடர்பில் ஆராய இந்திய நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மான

## ஈழத் தமிழர் 8 பேர் இன்று தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து 8 பேர் இன்று காலை தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்ற தஞ்சம் கோரியுள்ளனர்.

# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 29ஆவது அமர்வு நாளை தொடக்கம்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 29ஆவது அமர்வு மார்ச் 29,30,31ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. முதல் நாள் அமர்வு நாளை காலை 8.30 மணிக்குத் தொடங்கும்.

இந்த வருட அமர்வு "பொருளாதார நெருக்கடியான சூழலில் மாற்றுத் தொடர்பாடலுக்கான தந்திரோபாயங்களைக் கண்டறிதல்" எனும் தொனிப் பொருளில் நடைபெறுகிறது. முதல் நாள் நிகழ்வில் பேராசிரியர் வேல்நம்பியின் "யாழ்ப்பாணத்தில் வணிக நிறுவனங்களின் சவால்களை எதிர்கொள்ளல்" எனும் தலைப்பிலான சிறப்புரை இடம்பெறும். பேராசிரியரின் இந்த ஆராய்ச்சிக்காக அவருக்கு பேராசிரியர் பாலசுப்பிரமணியம் நினைவு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது.

மூன்று நாள் அமர்வுகளிலும் சிறப்புப் பேருரைகள், கருப்பொருள் ஆய்வமர்வுகள் மற்றும் ஆய்வுக்கட்டுரை அமர்வுகள் போன்றன எட்டு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

விஞ்ஞானச் சங்கத்தால் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் தலைவர் பேருரையும் இறுதிநாள் நிகழ்வில் இடம்பெறும்.

மார்ச் 31 மதியம் 11.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை www.thejsa.org என்ற இணைய முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சுதுமலை பகுதியை சேர்ந்த 40 வயதான பெண்ணிடம் இருந்து 5.8 கிராம் ஹெரோயினும், சண்டிலிப்பாய் பகுதியை சேர்ந்த ஆண் ஒருரிடமிருந்து 2.5 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுதுமலை,சண்டிலிப்பாய்,சங்கானை பகுதியினை சேர்ந்தவர்கள். இவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திறந்து விடப்பட்டது. இன் நிகழ்வில் கடத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை கிளிநொச்சி வடபிராந்திய முகாமையாளர் இ.இரவீந்தின்.

வடமாகான உள்ளூராட்சி அமச்சின் செயளாலர் திருமதி பற்றிக் நிரஞ்சன் மற்றும் வடமாகான பிரதிச் செயளாலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த சைக்கிள் ஓட்டுநரான சிறுவன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயி ரிழந் துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி தப்பிச் சென் றுள்ளதுடன் மேலதிக விசாரணை களைக் காத்தான்குடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுற்றுலாத்துறையில் பயணிகளின் வருகையை அதிகரிக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். ஆனால், சுற்றுலாப்பயணிகளுக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்வது பற்றி யாரும் சிந்திப்பது கிடையாது.

சுற்றுலா விடயத்தில் முட்டை முக்கியமானதொரு விடயமாகின்றது. உள்நாட்டு உற்பத்திகளுக்கு அப்பால் நாம் இந்தியாவிலிருந்து முட்டைத் தொகுதியை இறக்குமதி செய்தோம். அந்த முட்டைகள் அனைத்தும் சுகாதாரப் பரிசோனைக்கு அமைவாகவே இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் இன்னமும் துறைமுகத்திற்கு வெளியில் அவற்றை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

அதிகாரிகள் கரிசனையின்றி இருக்கின்றார்கள். இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. நாட்டுமக்களுக்காகவே முட்டை இறக்குமதி இடம்பெற்றது. எனது வீட்டுத் தேவைக்காக இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

## அரசியலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நான் கொள்கை அடிப்படையில் அரசியல் நடத்தும் நபர். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் செல்லமாட்டேன்.

தேசிய அரசியலில் இருந்து ஓய்வுபெறத் திட்டமிட்டேன். கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் மேயராக சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனது. எனவே, திட்டங்களை முன்னெடுக்கவும், நான் தலைமைத்துவம் வழங்கிய அணிக்காகவுமே இம்முறை போட்டியிடுகின்றேன். இனிமேல் தேர்தலில் களமிறங்கமாட்டேன் - என்றார்.


## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தீர்க்கதரிசனமாகக் கூறிய பல விடயங்கள் தற்போது உண்மை என நிரூபணமாகி வருகின்றன. அதனால்தான் தனி ஒருவராக நாடாளுமன்றம் சென்று, முழு நாட்டையே நிர்வகிக்கும் வகையில் தற்போது தீர்மானங்களை எடுத்து வருகின் றார்.

இன்று வரிசை யுகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மின்வெட்டு அமுலில் இல்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பமாகும்.

ஜனாதிபதியின் பின்னால் பலர் அணிதிரள்கின்றனர். பலர் எதிர்காலத்தில் இணைவார்கள். மொட்டுக் கட்சியும் ஜனாதிபதியிடம் வேலைத்திட்டத்தை அனுமதிக்கின்றனர். எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைப் போட்டி இருக்காது - என்றார்.

# பங்களாதேஷ் நாட்டவர்கள் இருவர் கைது



போலி விசாக்களுடன் இரண்டு பங்களாதேஷ் நாட்டவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டனர்.

போலிக் கடவுச்சீட்டு, விசா பயன்படுத்தி ஆஸ்திரேலியாவிற்குச் தப்பிச் செல்ல முயற்சித்த நிலையில் திங்கட்கிழமை காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் 50 மற்றும் 24 வயதுடையவர்கள் எனவும் ஸ்ரீலங்கன் விமான சேவையினூடாக டுபாயில் இருந்து அதிகாலை 5.00 மணியளவில் பண்டாரநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கான ஆவணங்களை விமான நிலைய குடிவரவு அதிகாரியிடம் வழங்கியபோது, அவர்களது இரண்டு கடவுச்சீட்டுகளில் இருந்த விசாக்கள் சட்டவிரோதமாக அகற்றப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து

அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. அதனடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## மத முரண்பாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனு ஒன்றையும் கையளித்துள்ளார்.

"இலங்கை சிங்கள இனவெறியர்கள் மதக்கலவரத்தை உருவாக்கும் நோக்கத்தில் கச்சத்தீவில் புத்தர் சிலையை நிறுவியுள்ளனர். தற்போதுவரையில் அங்கே அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருந்தது,

ஆண்டுதோறும் அங்கே ஓர் கிறித்தவத் திருவிழா நடைபெற்று வருகிறது. கிறிஸ்தவர்களை விரட்டியடிக்கும் நோக்கத்தில் சிங்கள இனவெறியர்கள் பெரும் புத்தர் சிலையை வைத்து ஒரு வளாகத்தை நிறுவத் திட்டமிட்டுள்ளனர்.

இது தமிழ்நாட்டு தமிழர்கள் மற்றும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல் மட்டுமல்ல அவர்களின் மத உரிமைகளை மீறும் செயலுமாகும்.

இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, கச்சதீவில் வைத்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றி மதநல்லிணக்கத்தை மீட்டெடுக்க இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மான மனுவை வழங்கியுள்ளார்.

# பெண் விவசாய ஆராய்ச்சியாளர் பணி தகராறில் வெட்டிக்கொலை

தங்காலை பிரதேசத்தில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தரான 30 வயதுடைய பெண்

திங்கட்கிழமை காலை வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்ட பெண் தனது வீட்டில் இருந்து களப்பணிக்காக சென்று கொண்டிருந்தபோது வெலியார பிரதேசத்தில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கி கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அலுவலகப் பணி தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதே பகுதியில் உள்ள ஒருவரே கொலையாளி என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண், வெலியார நெதோல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த திருமணமான பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கண்டியில் ரயில் மோதி மாணவன் உயிரிழப்பு

கண்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தொடருந்தில் மோதுண்டு மாணவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கண்டி, முல்கம்பொல பகுதியில் உள்ள ரயில் கடவையில் பதுளையில் இருந்து கண்டி நோக்கி பயணித்து கொண்டிருந்த தொடருந்தில் மோதுண்டே மாணவன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 16 வயதுடைய மாதபொவல, கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தொலைப்பேசியில் உரையாடிக்கொண்டு ரயில் கடவையில் நடந்து சென்றுள்ளார். தொடருந்து வருகதைக் கவனிக்கவில்லை.

# திருமலையில் நடந்த விபத்தில் 4 பேர் காயம்

திருகோணமலை-ஹொரவ்பொத்தானை பிரதான வீதி கிதுல்வதுவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோ சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த நான்கு பேரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து இன்று காலை இடம் பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து அரச ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பின்புறமாகப் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த கிண்ணியா ஜாவா வீதியை சேர்ந்த முன்னாள் பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ் (வயது 61) மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரியும் (வயது 60), அவரது ஊழியரும் காயமடைந்துள்ளனர். அத்துடன் ஓட்டோ சாரதியும் காயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

அம்பாந்தோட்டை, பழைய புந்தல வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் பாரிய வெட்டுக்காயங்களுடன் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த நபருக்குச் சுமார் 30 வயது இருக்கலாம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தெற்கு அதிவேக வீதியில் கோர விபத்து 15 பேர் காயம்




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து மீது கண்டெய்னர்பார வூர்தி மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் 15 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர், அவர்களில் 4பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்ப தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணியளவில் தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் களுத்துறை வடக்கு, பல்பொல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

கொழும்பை நோக்கி பயணித்த பேருந்து ஒன்று கண்டெய்னர் பாரவூர்தியைக் கடக்க முற்பட்ட போதே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற போது பேருந்தில் சுமார் 38 பயணிகள் இருந்துள்ளனர்..

களனிகம பொலிஸ் நிலைய அதிகாரிகள், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள், தீயணைப்பு மற்றும் உயிர்காப்பு பிரிவு அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்து காயமடைந்தவர்களை களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்து இடம்பெற்றதை தொடர்ந்து பேருந்தில் பயணிகள் கண்டெய்னர்பாரவூர்திச் சாரதியை தாக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈழத் தமிழர்....






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்னாரில் இருந்து படகு மூலம் சென்று இந்தியாவின் ஆளுகையில் உள்ள 3ஆவது மண் தீடையில் இறங்கிய அவர்களை இந்திய கரையோர காவல் படையினர் மீட்டனர்.

8 பேரும் தனுஸ்கோடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர் மண்டபம் அகதி முகாமிற்கு அனுப்பப்படுகின்றனர்.

கிளிநொச்சி தர்ம்புரத்தை வாழ்விடமாக கொண்ட இரு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரே இவ்வாறு தமிழ்நாட்டிற்குச் சென்றுள்ளனர். இவர்களில் 3 பெண்களும் 4 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

## மக்கள் நலனுக்காக செயற்படமுடியாவிட்டால்

# நுகர்வோர் அதிகார சபையை ஜனாதிபதி நீக்க வேண்டும்

## ஜகத் குமார கோரிக்கை



பணவீக்கம் அதிகரித்த போது பன்மடங்கு அதிகரிக்கப்பட்ட உணவு பொருள்களின் விலை பணவீக்கம் குறைவடைந்த பின்னரும் குறைவடையவில்லை. நுகர்வோர் அதிகார சபை என்பதொன்று உள்ளதா, இல்லையா என மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

நுகர்வோரின் நலனுக்காக செயற்பட முடியாவிட்டால் நுகர்வோர் அதிகார சபையை நீக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளேன் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தலங்கம பகுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கடந்த ஆண்டின் இறுதி பகுதியில் பணவீக்கம் 70 சத வீதத்துக்கு உயர்வடைந்த போது உணவு பொதி உட்பட அத்தியாவ சிய உணவுப் பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்பட்டது. வியாபாரிகள் பணவீக்கத்துக்கு நிகராக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை நிர்ணயித்தார்கள்.

பணவீக்கம் தற்போது வீழ்ச்சியடைந்து செல்கிறது, ஆனால் உணவுபொருள்களின் விலை குறைவடையவில்லை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் சேவை துறைகளின் விலை குறைப்பு ஊடாக மாத்திரமே நிவாரணம் வழங்க வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது, வியாபாரிகள் உணவு பொருள்களின் விலைகளை தீர்மானித்துக் கொள்கிறார்கள்,

அத்தியாவசியப்பொருள்களின் விலைகளை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். அதனை விடுத்து நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி இலாமடையும் வர்த்தக மாபியாக்கள் விலையை நிர்ணயித்துக் கொண்டால் அரசாங்கத்துக்கான தேவை ஏற்படாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானித்தார்கள். இறுதியில் கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டு மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை தொடர்பில் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதனை விடுத்து தேவையற்ற காரணிகளில் அவதானம் செலுத்தக் கூடாது. அத்தியாவசியப்பொருள்களின் விலை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையை கோப் குழுவுக்கு அழைத்து பேச்சு மேற்கொண்ட போது சந் தையில் பொருள்களின் விலை தொடர்பாக ஆராய முடியாது. ஆனால் பொருள்களின் விலையை நிர்ணயிக்க முடியும் எனக் குறிப்பிட்டார்கள்.

நுகர்வோரின் நலனைக் கருத்திற் கொண்டு நுகர்வோர் அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே, நுகர்வோருக்காக நுகர்வோர் அதிகார சபை செயற்படாவிட்டால் அதனை இரத்து செய்வது சிறந்ததாக அமையும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளேன். – என்றார்.

# பசுமைப் பொருளாதாரத்தில் பிரவேசித்த முதலாவது நாடாக இலங்கையை மாறும்!

## நம்புகிறார் ஜனாதிபதி ரணில்



பிராந்தியத்தில் பசுமைப் பொருளாதாரத்தில் பிரவேசித்த முதல் நாடு என்ற வகையில், அடுத்த இரண்டு மாதங்களில் பசுமைப் பொருளாதாரக் கொள்கையை இலங்கை அறிமுகப்படுத்தும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேயிலை ஏற்றுமதியில் இலங்கை முதலிடத்துக்கு வந்ததைப் போன்று பசுமைப் பொருளாதாரக் கொள்கையிலும் இலங்கையை முதலிடத்திற்கு கொண்டு வருவதே தமது நம்பிக்கை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வந்த முதலீட்டாளர்கள் குழுவுடன் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, கடன் மறுசீரமைப்பு மற்றும் பசுமை ஆற்றலில் கவனம் செலுத்துதல் ஆகிய இரண்டுபிரதானபிரச்சினைகள் இலங்கைக்கு அவசியமா உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் ஆலயத்தில் சிறப்புற நடந்த 2 ஆவது பங்குனி திங்கள் பூசை

வரலாற்று சிறப்புமிக்க மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பங்குனி இரண்டாம் திங்கள் திருவிழா வெகு விமர்சையாக இடம்பெற்றது.

நேற்று அதிகாலை பக்த அடியவர்கள் அம்மனுடைய தீர்தகேணியில் நீராடி பன்றி தலைச்சி அம்மனுக்கு பொங்கல் பொங்கியும் அம்மனுக்கு பிடித்த உணவான கஞ்சி சமைத்தும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

பால்குட பவனி எடுத்தல், ஆட்டக்காவடி, தூக்குக் காவடி, தீச்சட்டி எடுத்தல் என பக்த அடியார்கள் தங்களுடைய நேர்த்திக்கடன்களை செலுத்தியிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை வாழ்த்து தோத்திரம் என ஆகமமுறைப்படி வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி பன்றித்தலைச்சி அம்மன் உள்வீதியுலா வருகை தந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்திருந்தார்.

யாழ். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு நாட்டின் அனைத்து பாகங்களிலும் இருந்து பக்த அடியவர்கள் வருகை தருகின்ற அதே வேளையில், இலங்கை பாதுகாப்பு படை மற்றும் சாரணர் இயக்கம் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

# சம்பூரில் சூரியசக்தி மின் நிலையத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

திருகோணமலை சம்பூரில் இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் இணைந்து சூரிய மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சம்பூர் அனல் நிலையம் நிர்மாணிக்கப்படவிருந்த அதே இடத்தில் 135 மெகாவோட் சூரிய சக்தி திட்டத்தை 2 கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 42.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 50 மெகாவோட் சூரிய மின்சக்தித் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த கட்டத்தை 2024 முதல் 2025 வரை 2 ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக, 72 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் மேலதிகமாக 85 மெகாவோட் திறன் கொண்ட சூரிய மின் கட்டமை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியே- ாகிப்பதற்காக 42 மில்லியன் டொலர் செலவில் கப்பல்துறையிலிருந்து ஹபரணை வரை 220 கிலோவோட் திறன் கொண்ட 76 கிலோமீற்றர் நீளமான விநியோக கட்டமைப்பு அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திட்டத்துக்கான ஒப்பந்தம் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி கைச்சாத்தானது.

அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்கும் வகையில், திருகோணமலை, சம்பூர்பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா – இலங்கை அரசாங்கங்களிடையே 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், அந்த இடத்தில் சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் மாற்றி அமைக்க இரு நாடுகளும் ஒப்புக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மத்திய அரசின் பொறுப்பில் நாவலர் கலாசார மண்டபம் ஆளுநருக்கு எதிராக யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

நாவலர் கலாசார மண்டபம் வடமாகாண ஆளுநரால் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்றிலில் இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

ஆளுநர் என்ற எழும்புத் துண்டுக்காக தமிழினத்தை விற்காதே, ஜீவன் தியாகராஜாவே உனக்கு மனசாட்சி இல்லையா போன்ற கோங்களை எழுப்பியவாறு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்;டனர்.

# அடித்து நொறுக்கப்பட்டுள்ளது திருநெல்வேலி சிறுவர் இல்லம்





யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் சைவ சிறுவர் இல்லத்தின் அலுவலகம் மற்றும் சிறுவர் இல்ல விடுதியின் ஒருசில பகுதிகள் என்பன சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள சில சிறுவர்களினால் அடித்து உடைத்துசேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய- வருவதாவது –

மேற்படி சிறுவர் இல்லத்தின் விடுதி காப்பாளராக நிர்வாகத்தினரால் நியமிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் , சில மாத காலத்திலையே விடுதி முகாமையாளராக பதவி உயர்வு பெற்று இருந்தார்.

பதிவு உயர்வு பெற்ற பின்னர், சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களை உடல் ரீதியாகக் கடுமையான தண்டனைகளை வழங்கி வந்துள்ளார். திறப்பினால் ஒரு சிறுவனுக்கு தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியமை , சிறுவன் ஒருவனுக்கு சூடு வைத்தமை , இவரது கொடுமைகள் தாங்காது விடுதியை விட்டு தப்பியோடிய சிறுவனை தாயார் மீள இல்லத்தில் ஒப்படைக்க வந்த போது , தாயாருடன் அநாகரிக வார்த்தைகளில் பேசியமை பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர் தொடர்பில் இல்ல நிர்வாகத்துக்குக் கிடைக்கப்பெற்று உள்ளன.

அதனை அடுத்து நிர்வாகத்தினர் முகாமையாளரான குறித்த இளைஞனை பதவி நீக்கம் செய்து வேலையை விட்டு நீக்கியுள்ளனர்.

வேலையை விட்டு நிர்வாகம் நீக்கிய போதிலும், அவர் இல்லத்தில் இருந்து வெளியேற மறுத்துள்ளார். அதனால் பொலிஸார் ஊடாக நிர்வாகத்தினர் நீதிமன்றை நாடினர். அதனை அடுத்து திங்கட்கிழமை அந்த நபரை இல்லத்தில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு நீதிமன்று கட்டளையிட்டது.

அந்தநிலையில் மாலையில் இருந்து தான் வெளியேறும் போது அங்கிருந்த சில மாணவர்களை தூண்டி வன்மு- றைகளை தோற்றுவிற்கும் முகமாக அலுவலகத்தையும் இல்ல விடுதிகளின் சில பகுதிகளையும் அடித்து உடைக்க வைத்துள்ளார் என நிர்வாகத்தினர் குற்றம் சுமத்துகின்றனர். அதேவேளை குறித்த நபர் சிறுவர்களை உடல் ரீதியாக மோசமாக துன்புறுத்துகின்றார் என பல தடவைகள் சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரியிடம் முறையிட்ட போதிலும் , குறித்த அதிகாரி அவருடன் நட்பு பாராட்டி அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்நிலையில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலி- ஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

"வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று அடையாளம் காணப்பட்ட சிறுவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்து அவர்களின் எதிர்கால வாழ்க்கையை வீணடிக்க விரும்பாத நிலையில் அவர்களை மாத்திரம் வேறு இல்லங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் கோரியுள்ளோம்.

சிறுவர்களை வேறு இல்லங்களுக்கு மாற்ற தம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது. அது தொடர்பில் தாம் நீதிமன்றுக்கு அறிவிப்பதாகவும் , நீதிமன்றின் ஊடாக சிறுவர்களை வேறு இல்லங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கிறோம் என பொலிஸார் நிர்வாகத்தினரிடம் உறுதி அளித்துள்ளனர்"" என்று தெரிவிக்கப்பட்டது.

# அரசுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்கிறார் முஜிபுர்

நாட்டு மக்கள் உலக நாடுகள் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகள் இலங்கையில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தொடர்ச்சியாக பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி தேர்தலை பிற்போடும் வேலைத்திட்டங்களையே மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் நாட்டின் ஜனநாயகத்தைப் புறந்தள்ளி சர்வாதிகாரமாக செயற்படும் அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டு மக்கள் தற்போது தேர்தல் ஒன்றையே கோருகின்றனர். தமக்கு விருப்பமானவர்களைத் தெரிவுசெய்து பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

இருப்பினும், அரசாங்கம் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை நிராகரித்து ஜனநாயகத்துக்கு விரோதமாக சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுகிறது.

ஏற்கனவே நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்தாமல் சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவதால் மீண்டும் நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டு வருடங்கள் பிற்போடப்பட்டிருந்த நிலையில் தற்போது அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை நடத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. சர்வதேச நாடுகள் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளும் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றன.

குறிப்பாக, சர்வதேச நாணய நிதியமும் தேர்தலுக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பரந்துபட்ட சமூகமும் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் நிலையில் அரசாங்கம் அதனைப் புறந்தள்ளி அதற்கு எதிராக தேர்தலை நடத்தாமல் இருக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது. இதேவேளை நீதிமன்றத்தால் தேர்தலுக்கான நிதியை முடக்கும் செயற்பாட்டுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

குறிப்பாக வரவு – செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், இன்றளவில் அதற்கான நிதி வழங்கப்படவில்லை. இது தொடர்பில் நாம் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

மேலும், நாட்டின் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். நாட்டின் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைகளுக்கு பங்கம் ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையைப் பாதுகாக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

மக்களின் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இன்று இவ்வாறு ஜனநாயகத்துக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும். நாட்டில் மற்றொரு தடவை சர்வாதிகார ஆட்சி உருவாக இடமளிக்கக் கூடாது. – என்றார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

**வெடுக்குநாறி மலையில் இந்து மத அடையாளங்கள் அழிக்கப்பட்டு ஆதி லிங்கம் அகற்றப்பட்டமையைக் கண்டித்து போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. ஆலய நிர்வாகத்தினர் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர். தமது ஆலயம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதற்கான எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்யும் வகையில் அவர்கள் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர். என்றாலும் இது ஓர் ஆலயம் மட்டும் சார்ந்த செயலல்ல.**

**ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களுக்கும் எதிரான பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பின், அத்துமீறலின், அட்டூழியத்தின் சிறுகூறு மட்டுமே வெடுக்குநாறிச் சம்பவம். அண்மை நாட்களிலேயே மணற்கேணி, கச்சதீவு, குருந்தூர் மலை என்று பௌத்த ஆக்கிரமிப்பும் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் திமிரும் பல இடங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீதித் துறையையே இவை அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளன. அதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பௌத்தம் தவிர்ந்த மதத்தவர்களுக்கும் நீதித்துறையின் மீது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதைத்திருக்கின்றன. அப்படிப் பார்க்கும்போது ஒட்டுமொத்தமாக இந்த நாட்டின் பல்லின பலமத இருப்புக்கே சவால் விடுகின்றது பௌத்த சிங்கள பேரினவாதம்.**

**இது ஒரு பொது அச்சுறுத்தல், இந்தப் பொது எதிரியை அனைத்து மக்களும், அதாவது தமிழ், முஸ்லிம்கள் தவிர சிங்களக் கிறிஸ்தவர்களும் சிங்கள முற்போக்காளர்களும் சேர்ந்தே எதிர்க்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் இந்தப் பிரச்சினையில் பௌளத்த சிங்கள மேலாதிக்கத்தை ஒரு சிறு காலத்திற்குக்கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்படும்.**

**எனவே பங்குனி 30 போராட்டத்தை வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலய அழிப்புக்கு எதிரான போராட்டம் என்கிற நிலையிலிருந்து இலங்கையில் பௌத்த சிங்களவர்கள் தவிர்ந்த அனைவருக்குமான அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டமாக அதனைத் தரமுயர்த்துவது காலத்தின் தேவை. அந்த ஒருமுனைப்பட்ட போராட்டக்களத்தில் கட்சி பேதமின்றி, வர்க்க பேதமின்றி, இன மத பேதமின்றி, பிரதேச பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவதும் அவசியம்.**

**தமிழ் மக்களுக்குத் தேவையானது தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காகக் கூட்டுச் சேரும் மலின ஒற்றுமையல்ல. அவர்களின் இருப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இத்தகைய தருணங்களில் அவர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒற்றுமை மட்டுமே. எனவே தமிழ் அரசியல் தலைமைகள் உடனடியாக ஒன்றுகூடி இது குறித்து ஆராய்ந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வருவதுடன் போராட்டத்தில் மக்களை அணி திரட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் உடன் எடுக்கவேண்டும்.**

**அதுமட்டுமன்றி முஸ்லிம் கட்சிகள் மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனும் பேசி அவர்களுக்கும் அச்சுறுத்தலின் தாற்பரியத்தையும் இந்தப் போராட்டத்தில் அவர்கள் இணைந்துகொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி அவர்களையும் இணைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். அதேபோன்று சிங்களக் கிறிஸ்தவர்களுடனும் சிங்கள முற்போக்குச் சக்திகளுடனும் இது விடயத்தில் உடனடியாகப் பேசி அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அத்தகைய ஒரு மாபெரும் போராட்டத்தால், ஒருங்கிணைவால் மட்டுமே இது விடயத்தில் கொழும்பின் கடைக்கண் பார்வையையாவது திருப்ப முடியும்.**

**அதற்காக கட்சிகள், தலைவர்கள் அர்ப்பணிப்புடன் விரைந்து பணியாற்றவேண்டும். அறிக்கைகள் விடுவது, போராட்டங்களுக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுப்பது என்பவற்றைத் தாண்டி மக்களை அணி திரட்டுவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். வர்த்தக சங்கங்களுடனும் பேசி போராட்டம் நடக்கும் சில மணி நேரத்திற்காவது வடக்கு, கிழக்கு, மலையம் என்று எங்கும் கடையடைப்புக்களை நடத்துவதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராயவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களினதும் பௌத்தம் தவிர்ந்த மதங்களினதும் இருப்புக்காக இதனைச் செய்ய வேண்டும்.**

### சர்வதேச நாணய நிதியத்தின்

# நிபந்தனைகளை நிறைவேற்ற விசேட ‘அமுலாக்கப் பிரிவு’!

### இந்திரஜித் குமாரசுவாமி பரிந்துரைக்கிறார்



சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்தின்கீழ் இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கென அயர்லாந்தில் ஸ்தா பிக்கப்பட்டதை ஒத்த, விசேட அதிகாரங்களுடன்கூடிய ‘அமுலாக் கப்பிரிவை’ நிறுவுவதற்கு இலங்கை நாட்டம் காண்பித்திருப்பதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

‘சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்தைத் தொடர்ந்து இலங்கையின் அடுத்த கட்டம் என்ன?’ என்ற தலைப்பில் இலங்கை மத்திய வங்கியால் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்நிலை முறைமையில் கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாட்டின் மீதான நம்பிக்கை சீர்குலைவதன் மூலம் சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டம் இரத்துச்செய்யப்படுவதையும், பொருளாதார மீட்சி செயன்முறை பின்னடைவைச் சந்திப்பதையும் தடுக்கும் நோக்கிலேயே இந்த அமுலாக்கப்பிரிவை ஸ்தாபிப்பதற்கு இலங்கை திட்டமிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நாம் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை மீறிச்செயற்படும்போது, அந்தச் செயற்திட்டம் இரத்துச்செய்யப்படக்கூடும்.

அது தற்போது குறித்த உதவிச்செயற்திட்டத்துக்கு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வலுவடைய ஆரம்பித்துள்ள நம்பிக்கை சீர்குலைவதற்கு வழி வகுக்கும்.எனவேஅமுலாக்கப் பிரிவை ஸ்தாபிப்பதில் ஜனாதிபதி பெரிதும் நாட்டம் கொண்டிருக்கின்றார். – என்று கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று அந்தக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதுடன், அது உரியவாறு இயங்குவதை உறுதிசெய்யவேண்டும் என்று தெரிவித்துள்ள அவர், எந்தவொரு நாட்டின் அரசாங்கத்துடனும் பேச்சு நடத்தி, அவசியமான விடயங்களைப் பூர்த்திசெய்யக் கூடிய அதிகாரமுடைய ஒருவர் அதனை நிர்வகிக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு மிகக்குறுகிய காலத்தில் சர்வதேச நாணய நிதியசெயற்திட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான இந்த ‘அமுலாக்கப்பிரிவின்’ வகிபாகமே அயர்லாந்து கடந்த 2008 ஆம் ஆண்டு நிதியியல் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முக்கிய காரணமாக அமைந்தது.

அதுவே சர்வதேச நாணய நிதியச்செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய நாடுகளின் பட்டியலில் அயர் லாந்தை இணைத்தது. இந்த அமுலாக்க செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதில் அயர்லாந்து மிகக்கவனமாக இருந்தது.

அதேவேளை இச்செயன்முறை அமுலாக்கத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்டமைப்புக்கள் பொறுப்பாக இருந்ததால், சில பணிகள் பரவலாக்கப்பட்டிருந்தன. – என்று முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கைக்கும் அதனையொத்த ஒரு கட்டமைப்பு அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அவர், இந்த நெருக்கடியிலிருந்து நாம் நிலையாக மீட்சிபெறவேண்டுமானால், பொருளாதார அபிவிருத்திச்செயற்திட்டத்தை வலுப்படுத்தக்கூடிய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவேண்டும்.

கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதியுதவிச்செயற்திட்டங்கள் உறுதிப்பாடு மற்றும் கட்டமைப்புரீதியானமறுசீரமைப்பு ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கியிருந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானத்தை மக்கள் என்றும் எதிர்க்கமாட்டார்கள்

### இந்திக அனுருத்த நம்புகிறார்



நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானத்தை நாட்டு மக்கள் எதிர்க்கப் போவதில்லை. குறுகிய நோக்கமுடைய தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்கு அடிபணியப் போவதில்லை. நட்டமடையும் அரச நிறுவனங்கள் நிச்சயம் மறுசீரமைக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

நட்டமடையும் அரச நிறுவனங்களால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அரச நிறுவனங்கள் தமது தேவைக்கான நிதிகளை சுயமாகத் திரட்டிக்கொள்ள வேண்டும், திறைசேரியை நம்பியிருக்கக்கூடாது எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் சுயமாக செயற்படும் சூழலை ஏற்படுத்துவதற்காகவே நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னரும் அரச நிறு வனங்களிடமிருந்து சம்பளம் பெறும் தரப் பினர் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகி றார்கள்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானத்தை நாட்டு மக்கள் எதிர்க்கப் போவதில்லை. குறுகிய நோக்கமுடைய தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அடிபணியப் போவதில்லை. நட்டமடையும் அரச நிறுவனங்கள் நிச்சயம் மறுசீரமைக்கப்படும்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக அமைச்சு மட்டத்தில் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை எதிர்வரும் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய தீர்மானம் எடுக்கப்படும். – என்றார்.

# நாட்டின் எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கை – இந்தியா திட்டம்!

இரு நாடுகளுக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

இதன்படி, எரிசக்தி துறை ஒத்துழைப்பு தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் உள்ள பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்து பணியாற்றவுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் சூரிய சக்தி, காற்றாலை திட்டங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

# நெல் கொள்வனவிற்கு ரூ. 20 பில். ஒதுக்கீடு

### மஹிந்த அமரவீர தகவல்



பெரும்போகத்துக்குத் தேவையான நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 20 பில்லியன் ரூபாவை செலவிடத் தயார் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு பெரும்போகத்திற்கு தேவையான நெல்லை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாகக் கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசியை வழங்க முடிவு செய்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தைத் தொடர முடியாவிட்டால், இந்தக் குடும்பங்களுக்கு மானியமாக நிதியுதவி வழங்க அரசு தயாராக உள்ளது என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



# ஆப்கானில் தலிபான்கள் மீது ஐ.எஸ். தற்கொலைத் தாக்கு

## காபூலில் 6 பொதுமக்கள் அநியாயச் சாவு

ஆப்கானிஸ்தானில் அயலுறவுத்துறை அமைச்சகத்திற்கு வெளியே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 6 பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினர் உட்பட 12 பேர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் 2021ஆம் ஆண்டில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தலிபான்களின் போட்டி அமைப்பான கொராசன் மாகாண ஐ.எஸ். அமைப்பானது தாக்குதலைத் தீவிரப்படுத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், அந்த நாட்டின் தலைநகர் காபூலில் வெளியுறவுத்துறை அமைச்சகம் அருகே ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தியது. மாலிக் அசார் சதுக்கம் அருகே அமைந்துள்ள அயலுறவுத்துறை அமைச்சக அலுவலகம் நோக்கி உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு வந்த நபர் அதனை வெடிக்க வைத்தார்.

அந்த நபர் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் வருவதை அறிந்த பாதுகாப்புப் படையினர் அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அப்போது தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை அவர் வெடிக்கச் செய்தார்.

இந்த தற்கொலைத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 6 பேர் உயிரிழந்தனர். பாதுகாப்புப் படையினர் உட்பட 12 பேர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவத்தை தொடர்ந்து அயலுறவுத்துறை அமைச்சகம் அருகே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# "இம்ரான் கொல்லப்படுவார்" பாக். அமைச்சர் சர்ச்சை பேச்சு





இம்ரான் கான் கொல்லப்படுவார் அல்லது நாங்கள் கொல்லப்படுவோம் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ராணா சனாவுல்லா பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"பாகிஸ்தானின் ஆளும் கட்சிக்கு எதிரியாக இம்ரான் கான் இருக்கிறார். முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பாகிஸ்தானின் அரசியலைக் கொண்டு சென்றிருக்கும் பாதையால் ஒன்று அவர் கொல்லப்படுவார் அல்லது நாங்கள் கொல்லப்படுவோம். இம்ரான் கான் அரசியலை பகையாக மாற்றி இருக்கிறார். அவர் எங்கள் எதிரி. அவ்வாறே அவர் நடத்தப்படுவார் என்று பேசினார்.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் (70) கடந்த ஆண்டு ஏப்ரலில் பதவி விலகினார். அவரது தலைமையிலான கூட்டணியில் இருந்து, முக்கியக் கட்சி பிரிந்து, எதிர்க் கட்சியுடன் இணைந்ததால், நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், நம்பிக்கை வாக்கெடுப்பை சந்திக்கும் முன்பே, அவர் தனது பதவியிலிருந்து விலகினார்.


இதையடுத்து, பொஸ் ஷெரீப் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது. இந்த நிலையில் ஆளும் கட்சிக்கு எதிராக இம்ரான் தொடர்ந்து பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தி வந்தார். கடந்த நவம்பர் மாதம் இம்ரான் கான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், இம்ரான் கான் மீது பாகிஸ்தானில் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரப்புரையின்போது நீதித் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், போலீஸாருக்கும் மிரட்டல் விடுத்த வழக்கு, பாகிஸ்தானின் பிரதமராக இம்ரான் கான் இருந்தபோது வெளிநாட்டுப் பயணத்தில் முக்கியப் பிரமுகரிடமிருந்து பெற்ற பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் சேர்க்காமல் தனது சொந்த கணக்கில் சேர்த்த வழக்கு என 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் பாகிஸ்தான் போலீஸாரால் கைது செய்யப்பட இருந்தார். எனினும், இம்ரான் கான் கட்சி ஆதரவாளர்கள் நடத்திய போராட்டத்தால் அவரை கைது செய்ய பாகிஸ்தான் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்த நிலையில், கடந்த வாரம் இம்ரான் கானுக்கு அனைத்து வழக்குகளிலும் நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களுக்குச் செல்லும்போது தன்னை அரச தரப்பினர் கொல்லப்பார்க்கிறார்கள் என்று இம்ரான்கான் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அதனால் தான் தனது இடத்திலிருந்தவாறு மெய்நிகர்வழி மூலம் நீதிமன்ற வழக்குகளில் தோன்ற அனுமதிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே பாகிஸ்தான் அமைச்சரின் சர்ச்சைக்குரிய கருத்து வெளியாகி பெரும் அதிர்வை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

# தேசத்தின் ஆன்மாவைக் கிழிக்கின்றன அரசுத் தலைவர் ஜோ பைடன் தெரிவிப்பு





அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு நடைபெறுவது அதுவும் குறிப்பாகப் பாடசாலைகளில் துப்பாக்கிச் சூடு நடப்பது அடிக்கடி நிகழ்ந்து வருகின்றது. ஆயுதங்களைத் தனி மனிதர்கள் பெறுவதற்கான கட்டுப்பாடுகள் தீவிரமாக்கப்படவேண்டும் என்று அங்கு தொடர்ச்சியாகக் குரல் எழுப்பப்பட்டு வரும் நிலையிலும், தனி மனித சுதந்திரத்தின் பேரால் அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

டென்னிசி மாகாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்க இணைப்பரசுக்கு (சமஷ்டி அரசு) எதிராக ஆயுதச் சட்டங்கள் தொடர்பில் மீண்டும் கண்டனங்கள் ஏழுந்துள்ளன.

இந்த நிலையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து, இந்த துப்பாக்கிச் சூடு சம்பவமும், தொடர்ந்து நடைபெறும் துப்பாக்கி வன்முறைகளும் தேசத்தின் ஆன்மாவைக் கிழிக்கின்றன.

அமெரிக்க நாடாளுமன்றம் விரைவில் துப்பாக்கி தடைச் சட்ட வரைவை நிறைவேற்றவேண்டும் என்று அமெரிக்க அரசுத் தலைவர் ஜோபைடன் தெரிவித் தார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டில் (2022) மட்டும் துப்பாக்கி தொடர்பான வன்முறையில் 44,000 பேர் உயிரிழந்தனர்.





# அமெரிக்கப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு 3 குழந்தைகள் உட்பட 6 பேர் பரிதாபச் சாவு

## கொலையாளி பொலிஸாரால் சுட்டுக் கொலை

அமெரிக்காவில் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலையாளி மேலும் பல பாடசாலைகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டென்னிசி மாகாணத்தின் தலைநகரான நாஷ்வில்லில் உள்ள தொடக்கப் பாடசாலையினுள் மர்ம நபர் ஒருவர் நுழைந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். 3 குழந்தைகள் தவிர பள்ளி ஊழியர்கள் 4 பேரும் உயிரிழந்ததை நாஷ்வில் நகர காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் பல குழந்தைகள் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில் படுகொலையில் ஈடுபட்ட நபர் குறித்த பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஜான் டிரேக் தெரிவித்ததாவது:

கொடுமையான இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவத்தை நடத்தியவரின் அடையாளம் தெரியவந்துள்ளது. ஆட்ரி ஹேல் என்ற 28 வயது மூன்றாம் பாலினத்தவர் தான் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கிறார். அந்த நபர் அவரது லிங்க்ட் இன் புரொஃபைலில் தன்னை ஆண் என்று அவர் அடையாளப்படுத்தியிருந்தார். ஆனால் தாக்குதல் நடத்தியபோது பெண்ணுடையில் இருந்தார் அதனால் சிறு குழப்பம் நிலவியது. இப்போது அவர் மூன்றாம் பாலினத்தவர் என்பது உறுதியாகியுள்ளது.

அவரிடமிருந்து சதித்திட்டக் குறிப்புகள், பள்ளியின் வரைபடம், பொலிஸ் சுற்றிவளைத்தால் எப்படி எதிர்கொள்வது எனப் பல்வேறு விவரங்கள் அடங்கிய குறிப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் அவர் இந்தப் பள்ளியில் மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களிலும் தாக்குதலில் ஈடுபட திட்டமிட்டதும் தெரியவந்துள்ளது.

அந்த நபரிடமிருந்து 2 ரைஃபிள் துப்பாக்கிகள், ஒரு கைத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளன. ஹேல் பாடசாலையின் பக்கவாட்டு வாயில் வழியாக நுழைந்து இந்தத் தாக்குதலை நடத்ததியுள்ளார். இறந்துபோன 3 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு வயது 6, இன்னொரு குழந்தைக்கு வயது 9. உயிரிழந்த மூன்று பெரியவர்களும் 60 முதல் 61 வயது கொண்டவர்கள். அவர்களில் கேத்தரின் கூன்ஸ் என்பவர் பள்ளியின் தலைவர் என்பது தெரியவந்துள்ளது - என்றார்.



# மெக்காவில் பேருந்து எரிந்து 20 யாத்திரீகர்கள் கருகிச் சாவு

சவூதி அரேபியாவில் உள்ள புனித தலமான மெக்காவுக்கு சென்ற யாத்ரீகர்கள் பேருந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளதாவது:

சவூதியில் அகபா ார் பகுதியில் இருந்து புனித தலமான மெக்காவுக்கு சென்ற யாத்ரீகர்கள் பேருந்து விபத்துக்குள்ளானது. அப்போது பேருந்து தீப்பிடித்து எரிந்தது. இதில் 20 பேர் உயிரிழந்தனர். விபத்தில் 29 க்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்தனர்.

உயிரிழந்தவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். விபத்துக்கான காரணத்தை போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் புனிதத் தலங்களைச் சுற்றியுள்ள சாலைகள் சற்று ஆபத்தானவையாகவே உள்ளன. குறிப்பாக ஹஜ் பயணத்தின்போது, அதிகப்படியான பேருந்துகள் இடைவிடாத போக்குவரத்து நெரிசலை உருவாக்கும்போது ஓட்டுநருக்கு சாலைகள் குழப்பமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதுவே சாலை விபத்துக்கான காரணம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 2019 ஒக்டோபரில் மற்றொரு புனித நகரான மதீனா அருகே மற்றொரு கனரக வாகனத்துடன் பேருந்து மோதியதில் சுமார் 35 வெளிநாட்டினர் உயிரிழந்தனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர்.

# மக்களின் போராட்டங்களுக்கு அடி பணிந்தது இஸ்ரேல் ஆட்சி

## நீதித்துறை மறுசீரமைப்பு நிறுத்தி வைப்பு

மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பு மற்றும் போராட்டங்களுக்குப் பணிந்து நீதித்துறை மறுசீரமைப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்து-வதை நிறுத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேல் பிரதமராக பெஞ்சமின் நேதன்யாகு செயல்பட்டு வருகிறார். இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் உள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் நீதித்துறையின் செயல்பாடுகள் மற்றும் அதன் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் நேதன்யாகு தலைமையில் நாடாளுமன்றத்தில் புதிதாகச் சட்டம் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும்பட்சத்தில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் குறையும். மேலும், நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறவும் இஸ்ரேல் அரசுக்கு அதிகாரம் வழங்கவும். அதேபோல், நீதிபதிகளை நியமிப்பதிலும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்படும்.


இது நீதித்துறையை முடக்கும் செயல் எனக்கூறி இஸ்ரேலில் மக்கள் பெரும் போராட்டத்தில் குதித்தனர். மக்கள் போராட்டங்களுக்கு பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அந்த வகையில் போராட்டத்திற்கு டெல் அவிவ் விமான நிலைய ஊழியர்களும் ஆதரவு தெரிவித்து வேலையைப் புறக்கணித்தனர். இதனால் விமான சேவை பாதிக்கப்பட்டு டெல் அவிவ் விமான நிலையம் மூடப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. கண்ணீர்ப் புகைகுண்டுகளை வீசியும், நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தியும் போராட்டக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்னர். ஆனாலும், நீதித்துறை மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலில் மக் கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர் மக்கள் போராட்டங்களை அடுத்து புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிறுத்தி வைப்பதாக இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெ ர்சாக் இன்று வெளியிட்ட அறிக்கையில், புதிய நீதித்துறை சீர்திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இந்நிலையில், புதிய நீதித்துறை சிர்திருத்தச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகுவும் ஒப்புதல் அளித்தார். போராட்டக்காரர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



# 7 ஆயிரம் பேரை பணி நிறுத்தம் செய்கிறது டிஸ்னி

உலகின் பிரபலமான பொழுதுபோக்கு நிறுவனமான டிஸ்னி தனது நிறுவனத்தில் இருந்து 7 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்யும் நடவடிக்கையை தொடங்கி உள்ளது. செலவினங்களை குறைக்கும் நடவடிக்கையாகவும், எதிர்பார்த்த லாப இலக்கை அடைய முடியாதது உள்ளிட்ட காரணங்களாலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நிறுவனத்தின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக 7 ஆயிரம் பணி இடங்களை குறைப்பதற்கான கடினமான முடிவை நாங்கள் எடுத்துள்ளோம் என கூறப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2023 இல் வெளியிடப்பெற்றது.